பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 06 செவ்வாய்க்கிழமை (23-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:299

## அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு

# இடைக்கால நிர்வாகம் அவசியம் என உலக நிதி நிறுவனங்கள் வலியுறுத்து

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின் அவற்றின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிப்பு

கிளிநொச்சி,செப்ரெம்பர்23

**வடக்கு - கிழக்கில் அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு வலுவான இடைக்கால நிர்வாகம் ஒன்று இருக்கவேண்டியதன் அவசியத்தை தாங்கள் புரிந்துகொண்டிருக்கின்றார்கள் என்று சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கிறார்கள்.**

**நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேசிய பின்னரே இத்தகைய கருத்தை அவர்கள் வெளியிட்டிருக்கின்றனர்.**

மேற்படி சந்திப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்த செய்தித் தகவலிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட பிரதிநிதி ஜெரமி கார்ட்டர், ஐநா.அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி மிருஸ் பேர்மியோ, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நாட்டுக்கான இயக்குநர் ஜோன் ஆர். கூனி, உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் ஆகியோரே தமிழ்ச்செல்வனை நேற்றுச் சந்தித்தனர்.

நேற்றுக்காலை அநுராதபுரத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)



**நேற்று கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய ஜெர்மி கார்ட்டர் (சர்வதேச நாணய நிதியம்), ஜோன். ஆர்.கூனி (ஆசிய அபிவிருத்தி வங்கி), மிருஸ் பேர்மியோ (ஐ.நா. அபிவிருத்தித் திட்டம்), பீற்றர் ஹரோல்ட் (உலக வங்கி) ஆகியோர்.**

## பிரபாவின் அழைப்பின்பேரில் கருணா இன்று வன்னிக்கு!

மட்டக்களப்பு,செப்.23

புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கருணா அம்மான், மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் தலைவர் பிரபாகரனின் விசேட அழைப்பின் பேரில் இன்று வன்னிக்குச் செல்கின்றனர்.

இவர்களுடன் கிழக்கு மாகாணத்தில் இருந்து புலிகளின் சில முக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி, தெல்லிப்பழை, உடுவிலில் இன்று திலீபன் நினைவு ஊர்திப் பவனி

யாழ்ப்பாணம்,செப்.23

தியாகி திலீபனின் 16ஆவது நினைவுகூரலின் 9ஆவது நாளான இன்று தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய நினைவூர்தி தென்மராட்சி, தெல்லிப்பழை மற்றும் உடுவில் பகுதிகளில் பவனிவரவுள்ளது.

இன்று காலை 8மணிக்கு வரணி சந்தையிலிருந்து ஆரம்பமாகும் ஊர்தி பவனி வரணி மகாவித்தியாலயம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா 'பொங்குதமிழ்' நிகழ்வுக்கு பொலிஸ், இராணுவம் ஒத்துழைக்கும்

### நேற்றைய கலந்துரையாடலில் முடிவு

வவுனியா,செப்.23

வவுனியாவில் நாளை இடம்பெறவிருக்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்குவர் என்று நேற்று நடந்த கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் நடந்த இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்டப் பொறுப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களின் படகோட்டிகளுக்கு யாழ். மேல்நீதிமன்றம் சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம்,செப்.23

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தார்கள் என்று கூறப்படும் மீனவர்களின் படகோட்டிகள் நால்வருக்கு எதிராக யாழ். மேல்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நால்வருக்கும் தலா 6மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களின் படகுகளும், மீன்பிடி உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷ் தூதர் நேற்று யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,செப்.23

குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக பங்களாதேஷ் தூதர் யகு அலி நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் 'புலிகளின் குரல்' அதிகாரி நோர்வே தூதரக வாகனத்துடன் தடுப்பு!

### அரசுக்குத் தகவல் வழங்கியதையடுத்து விடுவிக்கப்பட்டார்

கொழும்பு,செப்.23

நோர்வே தூதரகத்துக்குச் சொந்தமான வாகனம் ஒன்று வவுனியாவில் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டது.

இந்த வாகனத்தின் மூலம் 'புலிகளின் குரல்' வானொலியின் அதிகாரி ஒருவரும் மற்றொரு புலி உறுப்பினரும் வவுனியாவில் அரச கட்டுப்பாட்

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஆலோசனைகளை இறுதியாக்குவதற்கு அயர்லாந்துக் கூட்டம் அவசியமாகின்றது

## சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தபின் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,செப்.23

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான எமது ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவதற்கு முன் அவை தொடர்பாக சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்காக அயர்லாந்தில் முக்கிய கூட்டமொன்றில் கலந்துகொள்ள வேண்டியுள்ளது.

- இவ்வாறு புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.


சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைக் கிளிநொச்சியில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில், தமிழ்ச்செல்வனோடு புலிகளின் பொருளாதார அபிவிருத்தி ஆலோசகர் டாக்டர் ஜோய் மகேஸ்வரன், 'சிரான்' பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கு. தூயவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின்னர் தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அயர்லாந்துக் கூட்டம் பற்றி அவரிடம் கேட்டபோதே அவர் மேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

பம்பலப்பிட்டியில்... மாணிக்க பிள்ளையார் கோவில் எதிரில்



புகைப்படத்துறையில் 20 வருட அனுபவமுள்ளவர்களால்
தரமான முறையில் துல்லியமான நவீன தொழில்நுட்பத்துடன்
விரைவாக உங்கள் புகைப்படங்களை கழுவிப்பெற்றுக்கொள்ள

விபரங்களுக்கு
பாஸ்கரன் - Tel 2222360
Jaffna

*Sameday Service ,Developing& Printing
*Special Service For Photographers
*Special Wedding Photography & Albums.
by THIRU

Visionarts Studio (PVT) LTD
DIGITAL MINI LAB
292 B காலிவீதி. பம்பலப்பிட்டிய.
தொலைபேசி இல - 2595537



தியாகி லெப்.கேணல் திலீபனின் 16 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகக் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாஸ் பொதுச்சுடர் ஏற்றுவதையும் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தமிழீழத் தேசியக் கொடி ஏற்றுவதையும் , தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் சுடரேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## நடமாடும் மருத்துவ சேவை

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் நடமாடும் மருத்துவ சேவை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை அச்சுவேலிப் பஸ்நிலையத்திற்கு அருகிலுள்ள வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகத்தில் நடைபெறும்.

இம்மருத்துவ சேவையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளானோர், குண்டுவெடிப்பு மற்றும் ஷெல் வீச்சினால் உடல், உள தாக்கம் அடைந்தோர், மன அதிர்வினால் பாதிக்கப்பட்டோர் சிகிச்சை பெறலாம். மேலும் இம்மருத்துவ சேவையில் மருத்துவ பரிசோதனை, அங்கப் பயிற்சி சேவை, உளவளத்துணை ஆகியனவும் இடம்பெறும்.

இந்நடமாடும் சேவையினால் குறிப்பாக அச்சுவேலி, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், ஆவரங்கால், புத்தூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மேலே குறிப்பிட்ட பாதிப்புக்குள்ளானோர் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

### மேல் நீதிமன்ற அனுமதியின்றி

# சந்தேக நபரை மூன்று மாதகாலத்துக்கு மேல் தடுத்துவைக்க நீதிவான் நீதிமன்றால் முடியுமா?

## பருத்தித்துறை வழக்கில் எழுந்துள்ள சர்ச்சை

யாழ்ப்பாணம்,செப்.23

சந்தேக நபர் ஒருவரை மேல் நீதிமன்றத்தின் அனுமதியின்றி மூன்று மாத காலத்துக்குமேல் நீதிவான் நீதிமன்றினால் தடுத்துவைக்க முடியுமா? என்ற சர்ச்சையொன்று தற்போது யாழ். மேல் நீதிமன்றத்தில் கிளப்பப்பட்டுள்ளது.

தீயில் எரிந்து உயிரிழந்த பெண் ஒருவரின் மரணத்துக்குக் காரணமானவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை இளைஞர் ஒருவரின் வழக்கிலேயே இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது.

உடுப்பிட்டி, சந்தை வீதியைச் சேர்ந்த குணரத்தினம் தீபிகா என்ற இளம்யுவதி கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி தீயில் எரிந்து மரணமானார். இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மகாலிங்கம் விக்னேஸ்வரன் என்ற இளைஞன் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். பருத்தித்துறை நீதிமன்றத்தால் கடந்த ஐந்தரை மாதங்களாக அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப இளைஞனை பிணையில் விடுமாறு கோரி சட்டத்தரணி எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் கடந்த மாதம் 7 ஆம் திகதி மனு ஒன்றை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்த மனுவை மேல் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தார்.

மீண்டும் அவர் பிணை மனு ஒன்றை மேல்நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்தார்.

அந்த மனு மீது சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா பின்வருமாறு வாதிட்டார்.

"ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட மனுவை சில சட்ட ரீதியான காரணங்களுக்காக மீண்டும் தாக்கல் செய்துள்ளோம்.

"குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 115(III)ஆம் பிரிவின் கீழ் சந்தேக நபர் மீது மூன்று மாத கால முடிவுக்குள் வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும். அப்படி வழக்குத் தொடரப்படாத நிலையில் அவரை தொடர்ந்து தடுத்துவைக்க வேண்டுமாயின் மூன்று மாத காலம் முடிவடைவதற்குள் நீதிமன்றத்துக்கு சட்டமா அதிபர் விசேடமாக விண்ணப்பித்து, அதற்கான உத்தரவைப் பெறவேண்டும். பிரஸ்தாப சந்தேகநபர் தொடர்பாக இவையிரண்டும் செய்யப்படவில்லை.

"கொலையுண்ட யுவதியும் சந்தேக நபரும் ஒருவரை ஒருவர் காதலித்து வந்தனர்.

"சந்தேக நபர் பிரஸ்தாப யுவதியை கூட்டிச் செல்வதற்காக அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார் என்றும் - அச்சமயம் அந்த யுவதி விளக்கு ஒன்றுக்கு மண்ணெண்ணெய் விட்டுக்கொண்டிந்தார் என்றும் - சந்தேக நபர் சிகரெட் 'லைட்டரால் அவருக்கு தீ வைத்தார் எனவும் பொலீஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

"வாதத்துக்கு இதை ஏற்றுக்கொண்டாலும் மண்எண்ணெயை சந்தேக நபர் எடுத்துச் செல்லவில்லை. இறந்த யுவதியே மண்எண்ணெயை வைத்திருந்தார் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்" - இப்படி சட்டத்தரணி கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் "சந்தேகநபர் 'லைட்டரை ஏன் கொண்டு சென்றார்?" - என நீதிபதி கேள்வி எழுப்பினார்.

தற்போதைய சூழலில் சிகரெட் 'லைட்டர் வாலிபர் எல்லோருமே வைத்திருக்கும் ஒரு கருவி. பாடசாலை மாணவர்கள் கூட அதற்கு விதிவிலக்கு அல்ல" என்று சட்டத்தரணி பதில் அளித்தார்.

இந்நிலையில், நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா பிணை மனு தொடர்பாக ஆட்சேபனை இருப்பின் அதனைச் சமர்ப்பிக்க வல்வெட்டித்துறைப் பொலீஸ் பொறுப்பதிகாரிக்கும் சட்டமா அதிபருக்கும் அறிவித்தல் அனுப்பும்படி உத்தரவிட்டு மேல்விசாரணையை அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ம-3)

# யாழ்.கைத்தொழில் கண்காட்சியில் மாகாண ஆளுநர் பிரதமவிருந்தினர்

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ள 'புத்துலகப் பிரவேசம்' என்ற தொனிப்பொருளிலான கைத்தொழில் கண்காட்சியில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களமும், யாழ். மாவட்ட சிறிய, நடுத்தர கைத்தொழில் மன்றமும் இணைந்து வடக்கு-கிழக்கு மக்களின் பொருளாதார மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு இக் கைத்தொழில் கண்காட்சியை நடத்தவுள்ளது.

இக்கண்காட்சி எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக வடக்கு -கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன, வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராசா ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, தொழிற்றுறை அமைச்சின் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம், ஆளுநரின் செயலாளர் எஸ். அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், தேசிய அருங்கலைகள் பேரவைத் தவிசாளர் புத்திகீர்த்திசேன மற்றும் புடைவை கைத்தொழில் பணிப்பாளர் திருமதி வினித்தா செனவிரத்ன ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-5)

# மாலைதீவுக் கலவரங்களில் இலங்கையருக்குப் பாதிப்பில்லை

கொழும்பு,செப்.23

மாலைதீவில் தற்பொழுது அமைதி நிலவுகிறது. அங்கு நடைபெற்ற சிறைச்சாலைக் கலவரங்களில் இலங்கையரான கைதிகள் எவரும் காயமடையவில்லை என்று மாலைதீவுத் தூதுவர் கூறுகிறார்.

மாலைதீவுச் சிறையில் இலங்கையரும் கைதிகளாக இருக்கின்றபோதிலும், அவர்கள் அனைவரும் பாதுகாப்புடன் இருக்கின்றனர் எனவும் தூதுவர் டி.இஸட். ஏ.சதீன் மேலும் கூறினார்.

மாலைதீவின் தலைநகரான மாலேயில் உள்ள சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கலவரத்தின்போது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து, கலவரத்தில் ஈடுபட்ட பொதுமக்களால் அரசாங்கக் கட்டடங்கள் தாக்கப்பட்டன; பொலீஸ் ஜீப்கள் எரிக்கப்பட்டன.

இரு கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலே சிறைச்சாலையில் மூண்ட கலவரத்துக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. கலவரத்தைக் கட்டுப்படுத்த படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பல கைதிகள் காயமடைந்தனர்.

காயமடைந்த கைதிகளில் சிலர் சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் இரவு கொழும்புக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். கலவரங்களை அடுத்து மாலேயில் பிறப்பிக்கப்பட்ட இரவு நேர ஊரடங்கு ஞாயிறன்று நீக்கப்பட்டது. (ஏ)

# ஓய்வுபெற்ற சுகாதார ஊழியர்கள் இன்றுமுதல் சேவைக்கு அழைப்பு

## தொழிற்சங்கங்கள் போராட்டத்தை மேலும் விஸ்தரித்தன

கொழும்பு,செப்.23

அரச வைத்திய சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சில தரங்களைச் சேர்ந்த ஊழியர்களை சுகாதார அமைச்சு மீண்டும் சேவைக்கு அழைத்திருக்கிறது. சுகாதார ஊழியர்களின் தொடரும் வேலைநிறுத்தத்தால் சீர்குலைந்திருக்கும் வைத்தியசாலைச் சேவைகளை மேற்கொள்ளவே ஓய்வுபெற்ற ஊழியர்களின் சேவையைப் பெறுவதென அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

ஓய்வுபெற்ற ஊழியர்களை மீண்டும் சேவைக்கு அமைச்சு அழைத்திருக்கும் அதேவேளை, சுகாதார ஊழியர்கள் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தை நேற்று மேலும் விஸ்தரித்திருக்கின்றனர்.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை தவிர ஏனைய வைத்தியசாலைகளிலும் நேற்று நண்பகல் முதல் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும் அத்தியாவசிய சேவைகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன எனவும் ஊழியர் தொழிற்சங்கங்களின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

சுகாதார, போஷாக்கு நலன் அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே ஓய்வுபெற்ற ஊழியர்களை சேவைக்கு அழைத்திருக்கிறது. மருத்துவ தொழில்நுட்ப ஆய்வு உத்தியோகத்தர்கள், எக்ஸ்-கதிர் தொழில்நுட்பவியலாளர்கள், விழிப்புல தொழில்நுட்பவியலாளர்கள், பல் வைத்திய நிபுணர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோரே சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஓய்வுபெற்ற இந்த ஊழியர்களுக்கு ஓய்வூதியத்துக்கு மேலதிகமாக ஓய்வுபெற்றபோது வழங்கப்பட்ட சம்பளமும் வழங்கப்படும் என்று அமைச்சு தெரிவித்திருக்கிறது.

# சிறுமிகள் இருவரை விசர்நாய் கடித்தது

யாழ்ப்பாணம்,செப்.23

ரியூசனுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சிறுமிகள் இருவர் விசர்நாயினால் கடியுண்டனர்.

கடந்தவாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த பொ.சிந்துஜா(வயது 7), இ. ஜெனிற்றா(வயது 8) ஆகிய இருவருமே விசர்நாயினால் கடியுண்டவர்களாவர். (எ-10-117)

# வைத்தியசாலை வாசலிலேயே தாயும் பிரசவித்த சிசுவும் மரணம்!

## வேலைநிறுத்தம் இரு உயிர்களைப் பலிகொண்டது

வீட்டில் குழந்தையை பிரசவித்த தாயைக் குழந்தையோடு வைத்தியசாலைக்குக் கொண்டுவந்தபோதிலும் - வேலைநிறுத்தம் காரணமாக வைத்தியசாலைக்குள் கொண்டுசெல்ல ஊழியர் எவரும் இருக்காததால் வைத்தியசாலை வாசலிலேயே தாயும் பிள்ளையும் மரணமானார்கள்.

இப்பரிதாபச் சம்பவம் கடந்த வெள்ளியன்று காளிமகாபோதரை வைத்தியசாலையில் நடைபெற்றது.

பிரசவம் நடந்தபின்னர் தொப்புள் கொடியை அறுக்காமல் அதை அறுப்பதற்காக தாயும் பிள்ளையும் ஓட்டோவில் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்தம் காரணமாக தாயும் பிள்ளையையும் வைத்தியாலைக்குள் கொண்டு செல்ல ஒருவரும் இருக்கவில்லை. இதனால் மருத்துவர் ஒருவர் வரும்வரை இருவரும் ஓட்டோவிலேயே வைக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 20 நிமிடங்களின் பின்னர் மருத்துவர் ஒருவர் ஓட்டோ அருகே வந்து தாயையும் பிள்ளையையும் பரிசோதித்துப் பார்த்து இருவரும் இறந்துவிட்டனர் என்பதனைத் தெரிவித்தார்.

யக்கலமுல்ல, மாகெதரையைச் சேர்ந்த பரமசிவம் மாரியம்மா(வயது 28) எனும் மூன்று பிள்ளைகளின் தாய்க்கே இப்பரிதாப கதி ஏற்பட்டது.

கடந்த 17ஆம் திகதி வைத்தியசாலை கிளினிக்குக்கு வந்த இத்தாயை, பிரசவத்திற்கு இன்னும் சில நாள்கள் இருப்பதால் சிறுநீர் பரிசோதனை மேற்கொள்ளுமாறு மருத்துவர் கூறியிருக்கிறார். ஆயினும், வேலைநிறுத்தம் காரணமாக அப்பரிசோதனையை மேற்கொள்ளமுடியாது அத்தாய் வீடு திரும்பியிருக்கிறார்.



நான், எனது மனதுக்கு நேர்மையாகவும் தூய்மையாகவுந்தான் எனது பொறுப்பை செய்தேன். ஆனால், நான் எனது மக்களுக்குரிய பணியை முழுமையாக்கவில்லை என்பதையிட்டு பெரும் கவலையடைகிறேன்.

\- தியாகி திலீபன்.

# ஐ.நா. சபை வளாகத்தினுள் மீண்டும் குண்டுத் தாக்குதல்!

## ஈராக்கியப் பொலீஸார் இருவர் பலி; எட்டுப் பேர் காயம்!!

ஐ.நா. பணிப்பாளர்களைக் குறிவைத்து ஈராக்கில் மீண்டும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஐ.நா. தலைமையக வாசலில் காவல் காத்து நின்ற இரண்டு ஈராக்கியப் பொலீஸார் கொல்லப்பட்டனர்; எட்டுப் பேர் காயமடைந்தனர்.



ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்று இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பில் ஈராக்கிய பாதுகாவலர் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர். குண்டுவெடித்த இடத்தினைப் பார்வையிடும் ஈராக்கியப் பொலீஸாரையும் குண்டுவெடிப்பால் சிதைந்துபோன வாகனத்தையும் காணலாம்.

குண்டுகள் நிரப்பப்பட்ட வாகனம் ஒன்று ஐ.நா. தலைமையக வளாகத்தினுள் நுழைய முயன்றபோது அதனை அங்கு நின்ற பொலீஸார் தடுத்து நிறுத்தி சோதனை நடத்த முயற்சித்த போது அது வெடித்துச் சிதறியது.

இச்சம்பவத்தில் பொலீஸார் ஒருவரே கொல்லப்பட்டார் என்று அமெரிக்கப்படை கூறுகின்ற போதும், சுயாதீனத் தகவல்களின்படி இரண்டு பொலீஸார் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

குண்டுத் தாக்குதலினால் ஐ.நா. பணியாளர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று ஐ.நா. தலைமை அறிவித்துள்ளது.

சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில் அப்பகுதிக்கு விரைந்த இருபதுக்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவ வாகனங்கள் அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டன. உலங்கு வானூர்திகளும் அங்கு வட்டமிட்டன.

குண்டுத்தாக்குதல் நடந்த இடத்திற்குச் செல்லும் வீதிகளை ஈராக்கியப் பொலீஸார் தடை செய்துள்ளனர்.

ஈராக்கில் ஐ.நா. பணியாளர்களைக் குறிவைத்து மீண்டும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமைக்கு உலக நாடுகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தக் குண்டுத்தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான், கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி எமது பணியாளர்கள் தாக்கப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்கான கட்டடத்தில் இருந்தவாறு இன்னமும் இருபது பணியாளர்கள் சேவை செய்துவருகின்றனர். அவர்களைக் குறிவைத்து மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இதனால், அவர்களின் பாதுகாப்புக் குறித்து தெளிவான உறுதிமொழிகளை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை வழங்கவேண்டும் என்று கேட்டுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி புஷ் கூறுகையில், குண்டுத் தாக்குதல்களைக் கண்டு ஐ.நா. ஓரம்போகக் கூடாது. ஈராக்கில் ஐ.நாவின் உறுப்பு நாடுகள் முக்கிய பணிகளை எடுக்க முன்வர வேண்டும். அத்துடன், ஈராக்கில் அரசியல் யாப்பை தயாரிப்பதில் ஐ.நாவின் பங்கு பெரிதும் அவசியம் - என்றார்.

# ஈராக்கில் இருந்து தப்பிச் செல்ல அமெரிக்காவுடன் சதாம் பேச்சு?

ஈராக்கிலிருந்து தான் பத்திரமாக வெளியேறி வேறு ஒரு நாட்டில் தஞ்சமடைய உதவிசெய்யுங்கள் என்று அமெரிக்காவிடம் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் இரகசிய பேச்சு நடத்தினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

லண்டனில் இருந்து வெளிவரும் 'சண்டே பிக்சர்' என்ற பத்திரிகை இது குறித்து கூறியிருப்பதாவது:-

சதாம் தற்போது ஈராக்கில் உள்ள தனது சொந்த ஊரான திக்ரித் நகரில் இருந்து அமெரிக்க தளபதி ஒருவரிடம் இரகசிய பேச்சு நடத்தியுள்ளார்

ஈராக்கைவிட்டு தான் பத்திரமாக தப்பிச் சென்று வேறு நாட்டில் அடைக்கலம் அடைய உதவி செய்யுமாறு அந்த அமெரிக்கத் தளபதியிடம் சதாம் கேட்டார் என்று கூறப்படுகிறது.

முன்னைய சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த பெலவராஸ் நாட்டில் தான் தஞ்சம் அடைய விரும்புவதாகவும் சதாம் கூறியுள்ளார்.

பேரழிவு ஆயுதங்களை மறைத்துவைத்து இருக்கும் இடங்களைப் பற்றிய தகவல்களை அமெரிக்காவிடம் தெரிவிப்பதாகவும் சதாம் ஒப்புக்கொண்டுள்ளார்.

சதாமின் இந்த வேண்டுகோள் பற்றி அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கூறின - என்றுள்ளது.

# அமெரிக்காவின் வேட்டைக்காடாக ஈராக் தொழில்வளத்தை பலியிட முடிவு!

ஈராக் இடைக்கால நிர்வாகம், திறந்த சந்தைப் பொருளாதாரம் உட்பட பொருளாதார சீர்திருத்தங்களை அறிவித்துள்ளது. எண்ணெய் தவிர்ந்த ஏனைய தொழிற்சாலைகளை தனியாருக்கு விற்றுவிடுவதென அது முடிவு செய்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால டுபாயில் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டு நிகழ்வுகளில் ஈராக் நிதியமைச்சர் கமல் அல்கேலானி இதனைத் தெரிவித்தார்.

இது வாஷிங்ரனால் தயாரிக்கப்பட்ட விஞ்ஞாபனம் போன்றிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் பல்தேசிய கம்பனிகளின் வேட்டைக்காடாக ஈராக்கை மாற்றும் திட்டமென்றே ஈராக்கியர்கள் இதனை கருதுவர் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தனியார் மயப்படுத்தும் திட்டத்தை அமெரிக்க அதிகாரிகளே மேற்பார்வை செய்யவுள்ளனர்.

இடைக்கால நிர்வாகத்தின் இந்த முடிவையடுத்து, இழுத்தடிக்கும் ஈராக்கின் புனரமைப்பு வேலைகளை பொறுப்பெடுப்பதில் பல்தேசியக் கம்பனிகள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளன. இதற்கு உதவியாக இன்னும் சில வார நாள்களில் சர்வதேச வங்கிகளும் பக்தாத் வர அனுமதிக்கப்படவிருக்கின்றன. (ம)

# சிறையைப் பாதுகாத்த படையினர் மீது ஈராக்கில் துப்பாக்கிச் சூடு! மூவர் பலி!!

ஈராக்கிய கெரில்லாக்களின் தாக்குதலில் நேற்றுமுன்தினம் மூன்று அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர்.

தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் உள்ள சிறைச்சாலையில் காவல் காத்துக்கொண்டிருந்த படையினரைக் குறிவைத்தே தாக்குதல் நடந்துள்ளது.

இதில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர்; பதின்மூன்று பேர் காயமடைந்தனர்.

மற்றொரு சம்பவத்தில் ரமாடி நகரில் ரோந்து சென்ற படையினர் மீது கையெறிகுண்டுகள் வீசப்பட்டதனால் ஒருவர் கொல்லப்பட்டார்; மூவர் காயமடைந்தனர்.

ஈராக்போர் முடிந்துவிட்டது என்று ஜனாதிபதி புஷ் அறிவித்த பின்னர், இதுவரை 165 கூட்டுப்படையினர் கொல்லப்பட்டனர்.

ஈராக் போரின்போது 139 கூட்டுப்படையினர் மட்டுமே கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப்படையினர் மீதான தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்நிலை தொடர்ந்தால் வியட்நாமில் அமெரிக்கா சந்தித்த பேரழிவைப் போன்று ஈராக்கிலும் நடக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

# தி.மு.க.தலைமைப் பதவியை ஸ்டாலினிடம் கையளிக்க முயற்சி

சென்னை,செப்.23

படிப்படியாக வளர்ந்த பாரம்பரியச் செல்வமான தி.மு.கவை எதிர்காலத்தில் காப்பாற்றுவதற்கு மு.க.ஸ்டாலினின் தலைமை தேவை என்று அக்கட்சியின் பொதுச் செயலர் க.அன்பழகன் கூறியுள்ளார்.

தி.மு.கவின் அடிப்படைக் கொள்கைகளைக் காப்பாற்ற வேண்டியது, அதனைப் பட்டுப்போய்விடாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம். அடிப்படைக்கொள்கைகள் இல்லாமல் போய்விட்டால், ஸ்டாலினைக் கூட எதிர்காலத்தில் காப்பாற்ற முடியாது என்றும் அவர் கூறினார்.

அன்பழகனின் இந்தப் பேச்சின் மூலம், தி.மு.க. தலைமைப் பதவியை ஸ்டாலினிடம் கையளிப்பதற்கான முன்னேற்பாடுகள் நடக்கின்றன என்று கூறப்படுகிறது.

விழுப்புரத்தில் நடந்த தி.மு.க. மாநாட்டின் போதே அன்பழகன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்காலத் தமிழகத்திற்கு தேவை என்று நான் கருதுகிற தலைவர் ஸ்டாலின், கருணாநிதியின் மகன் என்ற முத்திரையை அவர் எதிர்காலத்தில் காட்டவேண்டும்.

ஸ்டாலினைப் புகழ்ந்து பேசுவதால எந்த ஆதாயமும் எனக்கு இல்லை.

அண்ணாவுக்குப் பிறகு கருணாநிதி தலைமையேற்றபோது, இவ்வளவு பெரிய இயக்கத்தை அவரால், அரவணைத்துச்செல்ல முடியுமா என்ற அச்சம் எனக்கு இருந்தது. ஆனால், அண்ணாவைப் போன்றே அனைவரையும் அரவணைத்து கட்சியைக் காத்திருக்கிறார்.

பெரியாரின் பெயரால் கட்சி நடத்துபவர்களின் செயலைப் பார்த்தால், பெரியார் இன்றைக்கு இருந்திருந்தால் தூக்குமாட்டிக் கொண்டிருப்பார்.

பெரியார், அண்ணாவுக்குப் பிறகு கருணாநிதியின் தலைமை கிடைக்காமல் போயிருந்தால், தமிழர்களுக்குப் பெரிய கேடுவிளைவித்திருக்கும். கருணாநிதி இல்லாமல் தி.மு.க. இல்லை; தி.மு.க. இல்லாமல் தமிழ்நாடு இல்லை.

கருணாநிதிக்குப் பிறகு தமிழர்கள் அநாதையாகிவிட வேண்டுமா? திராவிட இயக்கத்தின் எழுச்சி அழிந்துவிடவேண்டுமா? பெரியார் ஊட்டிய உணர்வை இளைஞர்களின் இரத்தத்தில ஏற்றவேண்டாமா? தமிழன் மனிதனாக வேண்டாமா? அதற்காகத்தான் ஸ்டாலின் தலைமையேற்று இந்த இயக்கத்தை வழி நடத்த வேண்டும் - என்றார்.




அடுத்த மாத நடுப்பகுதியில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ் இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். அவரது விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தோனேஷியச் சிறுவர் தலைநகரில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர். புஷ் இங்கே வரக் கூடாது என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர். ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஓய்வெடுக்கும் சிறுவர்கள் சிற்றுண்டி உண்ட காட்சி.

# இந்தியா - பாகிஸ்தான் இடையே அணு ஆயுதப்போர் வெடிக்கலாம்!

## ஜனாதிபதி முஷாரப் மிரட்டல்

இந்தியாவுக்கும்-பாகிஸ்தானுக்கும் இடையே பகைமை நீடித்தால் அது அணுஆயுதப் போராக வெடிக்கும் என்று ஜனாதிபதி முஷாரப் மிரட்டியுள்ளார்.

தினசரிப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு மிரட்டியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா ஆர்வம் காட்டுவதில்லை. காஷ்மீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதவரை இரு நாடுகளிடையே உறவு மேம்படாது. காஷ்மீர்ப் பிரச்சினை பற்றி பேச்சு நடத்த நாங்கள் பல முறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். ஆனால், இந்தியாவோ காஷ்மீர் பிரச்சினையை ஒதுக்கி விடுகிறது. காலம் கடந்துகொண்டிருக்கிறது. எங்களுடன் இந்தியா விளையாடிக்கொண்டிருக்கிறது. காஷ்மீர் பிரச்சினையை கிடப்பில் போட இந்தியா முயற்சி செய்து வருகிறது.

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் மிகவும் அபாயகரமானதாக முடிந்து விடும். அணு ஆயுத தாக்குதல் பற்றி ஒரு பைத்தியக்காரன் கூட நினைத்துப் பார்க்கமாட்டான். அது பற்றி நாங்கள் நினைத்துக் கூட பார்க்கவில்லை. ஆனால், இரு நாடுகளிடையே போர் ஏற்பட்டால் அது அணுஆயுதப்போருக்கு வழி வகுக்கலாம். ஆப்கானிஸ்தானில் உள்ள கந்தஹார் மற்றும் ஜலாலாபாத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகங்களை அந்த நாட்டு அரசு தவறுதலாக பயன் படுத்தி வருகிறது. இது கவலை அளிக்கிறது. இதற்கு பெரிய அளவில் நாங்கள் பதிலடி கொடுக்க வேண்டி வரும், என்று கூறியுள்ளார்.



மேற்குக் கரையின் ஹெப்ரோன் நகரில் இஸ்ரேலியப் படையினர் நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது இராணுவ டாங்கி ஒன்றும் ஜீப் ஒன்றும் பலஸ்தீன ஆயுததாரி ஒருவரின் வீட்டை தாக்கித்தகர்த்தன.

# ஒரே குரலில் பேசக்கூடிய சந்தர்ப்பம் முஸ்லிம் மக்களை விட்டு நழுவி விட்டது!

**கிழக்கு மாகாணத்தில் புதிதாக உருவாகியுள்ள அரசியல் நிலவரம் குறித்து ஆராய்கிறார் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.சிவசேகரம்.**

**18** மாதகாலமாக இடம்பெற்று வந்த சமாதான நடவடிக்கைகள் தற்போது சிக்கலடைந்திருப்பதற்கான காரணம், ஆரம்பத்திலிருந்தே அவ்விடயத்தில் காணப்பட்ட குறைபாடுகளேயாகும். இச்சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதற்கு முயன்ற தரப்பினர் இக்குறைபாடுகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயலும் நிலையையும் எம்மால் காணமுடிகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் கோரிக்கைகள் நியாயமானவையாகவோ அல்லது நியாயமற்றவையாகவோ இருக்கக்கூடும். ஆனால், இவ்விடயத்தில் அவர்கள் தெளிவானதொரு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். விசேடமாக, 20 ஆண்டு காலமாக அவர்களது முக்கிய அபிலாஷையாகவிருந்த தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு சமஷ்டி ஆட்சி தொடர்பான யோசனைக்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தமை இச்சமாதான நடவடிக்கைகளுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். விடுதலைப் புலிகள் அமைப்பினது இவ்விட்டுக்கொடுப்புக்கு நாம் அனைவரும் மதிப்பளித்தல் வேண்டும். ஆனால், அதன் அர்த்தம் அவர்களது கோரிக்கைகள் யாவற்றையும் நிறைவேற்றுவது என்பதல்ல. இருந்தபோதிலும், தனிநாட்டுக் கோரிக்கையை அவர்கள் கைவிட முன்வந்தமை ஒரு நல்ல அறிகுறியேயாகும்.

### இடைக்கால நிர்வாக சபை

இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனை புதிதாக முன்வைக்கப்பட்ட ஆலோசனையல்ல. கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பிருந்தே தற்போது அதிகாரத்தில் உள்ள கட்சி இடைக்கால நிர்வாக சபையொன்றை உருவாக்கப்போவதாக ஒப்புக் கொண்டிருந்தது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கூட அடிக்கடி அவ்வித யோசனையை முன்வைத்துவந்தது. அவ்வாறான நிலையில் தற்போது இடைக்கால நிர்வாகயோசனையை தமது அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்த விளைவது நியாயமற்றதாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக நாட்டின் அரசியல தலைவர்கள் இத்தேசியப் பிரச்சனை குறித்து புரிந்துணர்வுடன் செயற்படுவதாகத் தோன்றவில்லை.

முதலில் இதுதொடர்பான புரிந்துணர்வு உருவாக்கப்படுவது அவசியமாகும். இந்த நாட்டில் தமிழ் மக்களை நசித்தொதுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காரணங்கள் தனியாகப் பிரிந்து வாழவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் உருவானது. ஆனால், பிரிவினை குறித்த குறிக்கோள் எதுவும் அவர்களது நோக்கமாக அமைந்திருக்கவில்லை.

இனப்பிரச்சினை இந்த அளவுக்கு உக்கிரமடையாதிருந்திருப்பின், பல்லின மக்களது அரசு என்ற வகையில் விஷேடமாக சமஷ்டி ஆட்சி முறை யோசனையோ அல்லது வேண்டப்படாத சூழ்நிலையோ உருவாக வாய்ப்பு ஏற்பட்டிராது. 1948ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தையடுத்து இச்சிக்கல் இனவாதப் பிரச்சினையாக உருவெடுத்தது. சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரேயே, வடபகுதித் தமிழ் மக் கள் தமது குறிக்கோளை முன்வைத்துப் போராட்டத்தில் இறங்கினர்.

அச்சட்டம் நிறைவேற்றப்படும் வரையிலும், யாழ்ப்பாணப் பகுதிப் பாடசாலைகளில் சிங்கள மொழியும் கற்பிக்கப்பட்டு வந்தது. சிங்களமொழி கற்பது தமிழ் மக்களுக்குச் சிரமமான தொன்றாக இருக்கவில்லை. தமிழ் மக்களுக்கு எதிரானதொரு நடவடிக்கையாகவே இச்சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அவ்வித கருத்து வெளிப்பாடு மூலமே தென்பகுதி அரசியல்வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அத்தோடு, இச்சம்பவத்தின் பலனாகவே வடக்கில் தமிழரசுக்கட்சியும் மக்களிடையே பிரபல்யமானது.

அந்த நிலையிலும் சமஷ்டி முறைக்குப் பதிலாக பிரதேச சுயாட்சி முறை குறித்து பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தமூலம் தமிழ் மக்களிடையே நம்பிக்கை வளர்ந்தது. அவ்வொப்பந்தம் அன்று நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால், இனப்பிரச்சினைக்கு அந்த வேளையிலேயே தீர்வு காணக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால், ஒருவரையொருவர் தோற்கடிக்க முயன்றதன் மூலம் இவ்விரு தரப்பினருக்குமிடையே பகைமை எனா ஆரம்பித்தது. தமிழ் மக்கள் பிரிவினை வாதத்துக்கு ஒரு போதும் ஆதரவளிக்கவில்லை.



தேசியம் என்பது நிரந்தரமான ஒன்றல்ல அது சூழ்நிலைக்கேற்றவாறு மாற்றியமைக்கப்படவேண்டியதொன்றாகும். இந்தியாவை பிரித்தானியா ஆட்சி செய்யாது இருந்திருப்பின், இன்று இந்தியாவிலும் பல அரசுகள் உருவாகியிருக்கும்.

இந்திய நாடு ஐக்கியப்பட்டிருப்பது நல்லதோர் அறிகுறி எனக் குறிப்பிடஇயலும். நாட்டிலுள்ள சகல இனங்களதும் அபிலாஷைகளை இந்தியா உறுதி செய்யுமானால், தொடர்ந்தும் அந்நாடு ஐக்கியமாக இயங்க இயலும்.

1948ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தையடுத்தே இந்நாட்டுத் தமிழ் மக்களால் தமக்கெனத் தனியான நிர்வாகக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்த போதும் சமஷ்டிக் கட்சியின் சமஷ்டி ஆட்சி யோசனைக்கு 1956ஆம் ஆண்டுவரை தமிழ் மக்களிடையே ஆதரவு கிட்டவில்லை. ஆனால், தாம் அரசியல் ரீதியாகப் புறக்கணிக்கப்படுவதாக உணர்ந்துகொண்ட பின்னரே, தமிழ் மக்கள் தமக்கெனத் தனியான நிர்வாக அமைப்பு அவசியம் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தனர்.

ஆனாலும், தமிழ் மக்களின் ஒத்துழைப்பின்றி சிங்கள மக்களாலோ அல்லது சிங்கள மக்களின் ஒத்துழைப்பின்றி தமிழ் மக்களாலோ வாழ்க்கையை ஓட்டுவது சிரமமானதொன்றாகும். ஓர் இனத்தவர் மற்றைய இனத்தவரில் தங்கியிருக்கும் நிலைமையே இந்நாட்டில் நிலவுகின்றது.

இந்த யதார்த்தத்தை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர் புரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனை இப்போது குழப்ப நிலையை அடைந்துள்ளது. அரசு சமர்ப்பித்த - இதுதொடர்பான யோசனைகளை பரீஸ் நகரில் கூடி விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஆராய்ந்துள்ளனர். ஆனால், இடைக்கால நிர்வாக யோசனைகள் தொடர்பாக பொதுமக்களுக்குத் தெளிவான விவரமெதுவும் தெரியவரவில்லை. அதேபோன்று அரசின் யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட மாற்று யோசனைகள் குறித்தும் விரிவான விவரம் அறியமுடியவில்லை.

அரசு சமாதானப் பேச்சுக்களின் முதற்சுற்றின் போது அல்லது இரண்டாம் சுற்றின்போது இது குறித்த தனது நிலைப்பாட்டைச் சமர்ப்பித்திருந்தால், இச்சமாதானப் பேச்சு வேறொரு கோணத்தில் சென்றிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்று எனது கருத்து.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் சமாதானப்பேச்சு மேற்கொள்ளப்படுவதில் சிக்கல்கள் எதுவுமில்லை. ஆனால், பிரச்சினைக்குத் தீர்வு முக்கியமானதல்லவா?

நாட்டின் சகல இனத்தவர்களும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அப்பிரச்சினைகளுக்கு முடிவுகாணும் வகையிலான தீர்வு ஒன்றைக் காண வேண்டியது இதில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினரின் முக்கியபொறுப்பாகும். அவ்விதம் இடம்பெறாவிடின், அதனால் எதிர்காலத்தில் வேறு பிரச்சினைகள் உருவாக இடமுண்டு. வேறொரு விததத்தில், இது எதிர்காலப் பிரச்சினைகளுக்கு இப்போது முதலீடு செய்வது போன்றாகிவிடும்.

யுத்தம் இடம்பெற்ற வேளையில் அதன் கொடூரத்தை தென்பகுதிப் பொதுமக்கள் உணரத்தக்க நடவடிக்கை எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை. அவ்விதம் தென்பகுதி மக்கள் யுத்தத்தின் கொடூரத்தை உணரச் செய்திருப்பின், யுத்தத்தை எதிர்க்கும் ஒரு சமுதாயம் உருவாக வழி பேற்பட்டிருக்கும். ஆனால், யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கம் கொண்டிருந்த அரசுகளுக்கு அதன் தாக்கத்தை நாட்டு மக்களுக்கு உணரவைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

இருந்தபோதும், இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு உடனடியாக தீர்வு காணப்படவேண்டுமெனக் கூறியுள்ளது. இது விடயத்தில் காலத்தை இழுத்தடிக்கும் போக்கைக் கடைப்பிடிப்பதாக அவர்கள் அரசைக் குற்றம் சாட்டுகின்றனர். இதில் உண்மை இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. அரசு பொதுத்தேர்தலை மையமாகக் கொண்டே தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேர்தல் மேடைகளில் இப்பிரச்சினையை அவர்கள் தமது துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த முடியும்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் சமாதான நடவடிக்கைக் குழு தமது தரப்பை நியாயப்படுத்திக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். ஆனால், தனி இராச்சியக் கொள்கையைக் கைவிடுவதென்ற தீர்மானத்துக்காக அவர்களுக்குக் கௌரவமளிக்க வேண்டும். தனி இராச்சியக் கொள்கையின் அடிப்படையில் உருவானதோர் அமைப்பு தனது ஆரம்பகால யுத்த முனைப்புடனான நடவடிக்கைகளைக் கைவிடுவதென்பது இலேசான காரியமல்ல. இதனை நாம் சாதகமான கணணோட்டத்திலேயே நோக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் இடைக்கால நிர்வாக சபையொன்றினை உருவாக்குவதன் மூலம் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல முடியும். ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாக சபை யோசனை முன்வைக்கப்பட்ட போதிலும், பின்னர் இரு தரப்பினராலும் அது கைவிடப்பட்டது. தற்போது மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பால் அக்கோரிக்கை எதற்காக எழுப்பப்படுகின்றதெனச் சிலர் வினாவுகின்றனர்.

18 மாதகாலமாக இடம்பெற்ற பேச்சுக்களின் பலாபலன்பற்றி மக்களால் இதுவரை புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆகையால் நிரந்தரமான தீர்வொன்று எட்டப்படும்வரை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இயல்பு நிலையினைப் பேணும் நோக்கத்தில் இந்த இடைக்கால நிர்வாகத்தைக் கோருவது நியாயமான கோரிக்கையேயாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ஏ-9 பாதை திறக்கப்பட்ட போதிலும் அதனால் இலாபமடைவது வர்த்தகர்களேயல்லாமல் சாதாரணபொது மக்களல்ல.

### கிழக்கில் நிலைமை

எவ்வாறாயினும் இயல்பு நிலை பேணப்பட வேண்டுமானால் வடக்குக் கிழக்குப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலை இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்படவேண்டும். ஆனால், அண்மையில் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் இடம்பெற்ற அமைதியற்ற நிலை ஏற்பட்டமைக்கு முக்கியமான இரு காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. 1983ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் அரசினால் ஊர்காவல் படை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அது முஸ்லிம் மக்களுக்கு உதவும் நோக்கத்தில் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும், அது உண்மையல்ல. அது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே பிரிவினையை உருவாக்கும் நோக்கில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

ஊர்காவல் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் தமிழ் - முஸ்லிம் மக்களது ஒற்றுமைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. இதன்பலனாய் தமிழ், முஸ்லிம் மக்களிடையே மோதல்கள் உருவாகின. அதற்கு முன்னர் தமிழ் ஆயுதக் குழுக்களில் பல முஸ்லிம் இளைஞர்களும் அங்கம் வகித்து வந்தனர்.

தற்போது இவ்விடயம் அரசியல் சிக்கலாக உருவெடுத்துள்ளது. இப்பகுதிகளில் இடம்பெறும் சகல கொலைச் சம்பவங்களும் அரசியல் அடிப்படையில் இடம் பெற்றவையல்ல. அவற்றில் பல தனிப்பட்ட காரணங்களால் இடம்பெற்ற கொலைகள்.

இவ்வித நிலைமையில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடனும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தொடர்பு உள்ளதாக நம்பமுடியாது. அதே வேளை இவற்றில் எந்தவொரு கொலைச் சம்பவத்திலும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தொடர்பேதும இல்லையென நம்பவும் நான் தயாராயில்லை.

இவ்வாறான சம்பவங்களில் அரசைப்போன்றே விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதும் பொறுப்புச் சுமத்தப்படுகிறது. இவற்றில் விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தொடர்பேதும் இல்லையாயின் அக்குற்றச் சாட்டுக்களை மறுப்பதோடு மட்டும் அல்லாது அவற்றை நடவடிக்கைகள் மூலம் அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

அதுமட்டுமன்றி இவ்வித கொலைச் சம்பவங்களுக்கும் தமக்கும் தொடர்பேதுமில்லையென விடுதலைப புலிகள் அமைப்பின் கீழ் மட்டத் தலைவர்களினாலன்றி மேல் மட்டத் தலைவர்களினால் அறிவித்தல் வெளியிடப்படல் வேண்டும். இவ்வாறான சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு உதவுமாறு தமிழ் மக்களினால் உத்தியோகபூர்வமான வேண்டுகோள் விடுக்கப்படல் வேண்டும். இவ்வித சம்பவங்களைக் கையாள்வதற்கு அரசின் உதவியை நாட வேண்டியதில்லை. சாதாரண பொதுமக்களின் முயற்சியினால் இவற்றில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். அரசியல் அழுத்தம் எதுவும் கிடையாதென பொதுமக்கள் நம்பக்கூடிய நிலை உருவானால், இவவாறான தவறான நடவடிக்கைகளை எவ்வித பயமுமின்றி எதிர்த்து நிற்க முடியும்.

அவ்வாறான தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கெதிராக அவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அதனால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக் வேண்டியேற்படுமென்ற அச்சம் காரணமாகவே பொதுமக்கள் இவற்றை எதிர்க்க முன் வருவதில்லை. சமூக விரோத நடவடிக்கைகளை ஒழிப்பதற்கான அதிகாரம் பொதுமக்களுக்கு வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

அவ்வாறே விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில இடம்பெறும் குற்றச் செயல்களுக்காக அவர்கள் பொறுப்பேற்க முடியாது என்பதோடு அதற்கான உறுதியையும் அவர்களால் வழங்கமுடியாது. இவ்விடயத்தில் அரசே முழுப்பொறுப்பையும ஏற்றல்வேண்டும். சாதாரண பொதுமக்கள் கஷ்டத்துக்கு உள்ளாக்கப்படும் வேளையில் எவ்வித தயக்கமுமின்றி அரசு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் அவசியமாகும்.

அதே போன்று, இப்பகுதிகளில் இடம்பெறும் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக சிறிதளவேனும் ஆராய்ந்து பார்க்காமல், முற்றுமுழுதாக விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது குற்றம் சுமத்துவது தனிப்பட்ட மட்டத்தில் விரும்பியவாறு கொலைச் சம்பவங்கள் இடம்பெற அனுமதிப்பதாக அமைகிறது.

ஜே.வி.பியினரின் கிளர்ச்சி இடம்பெற்ற கால கட்டத்திலும் இவ்வித நிலைமையே காணப்பட்டது. அவ்வேளையில் தனிப்பட்ட காரணங்களால் இடம்பெற்ற கொலைகளுக்கான பொறுப்பு, ஒன்றில் ஜே.வி.பியினர் மீதோ அல்லது அரச படைகள் மீதோ சுமத்தப்பட்டன. தாம் தவறிழைக்காவிட்டால், அத்தவறை எவ்வித தயக்கமுமின்றி வெளிப்படுத்த முடியும். அந்தவேளையில் அரசும் சரி, ஜே.வி.பியும் சரி பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொண்டன.

அவ்வாறான தவறை இன்று அரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகியன இழைத்தல் ஆகாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாயிருத்தல் அவசியமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகியவற்றைப் போன்றே முஸ்லிம் தலைவர்களும் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

அரசியல் தொடர்பற்ற இராணுவத்தையோ அல்லது பொலிஸ்துறையையோ இன்று காணமுடியாதுள்ளது. இவ்வித பிணைப்புக் காரணமாகவே கட்சி அரசியல் முன்னிலைப் படுத்தப்படுகிறது. பேச்சுக்களின் போது அரசும விடுதலைப் புலிகள் அமைப்பும் மேற்கூறிய விடயத்தையும் கவனத்தில் எடுத்தல் அவசியமாகும் முன்னர் இடம்பெற்ற பேச்சுக்களில் இவ்விடயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இதில் முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கும் பொறுப்புண்டு.

மற்றொரு வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும், தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்களுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. தமிழ் ஆயுதக் குழுக்களில் சில அரசுக்கெதிராக இயங்கிவந்த வேளையில் ஆயுத பலத்தின் அதியுச்ச நிலையைப் பேணும் குழுவுக்கு கூடிய கணிப்பு கிடைக்குமென்ற கருத்து நிலவியது. இரு சமூகங்களுக்கிடையே குரோதம் நிலவுமானால், அதில் ஒரு தரப்பினர் மறு தரப்பினருக்கெதிரான கடும் நிலைப்பாடுகொண்டிருத்தல் சாதாரணமானதொன்றே.

### முஸ்லிம் காங்கிரஸ் உட்கட்சிப் பூசல்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலுள்ள உட்கட்சிப் பூசல்கள் இதன் பிரதிபலிப்பே. கிழக்கு மாகாணத்தில் தற்போது உருவாகியுள்ள முறுகல் நிலைக்கும், அமைதி அற்ற தன்மைக்கும் இதுவே பின்னணியாக அமைந்தது.

இந்த முஸ்லிம் காங்கிரஸின் இரு அணிகளுமே தாம் ஒருவரை விட மற்றவர் முன்னணியில் இருப்பதாகக் காட்டிக்கொள்ள இந்த இனவாத, மதவாத கருத்துக்களை முஸ்லிம் சமூகத்தினிடையே தோற்றுவித்துள்ளன. இதில் ரவூப் ஹக்கீம், மற்றைய முஸ்லிம் தலைவர்கள் எவரையும் கலந்தாலோசிக்காது விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைத்துவத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டமையால் தற்போது பெரும் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் ஹக்கீமுக்கு எதிரான தரப்பினர் ஹக்கீம் பிரபாகரனுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தைத் தன் கைகளில் எடுத்துக் கொள்ளப் போகிறாரென்று சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

தற்போது கிழக்கு மாகாண நிலைமை நீறுபூத்த நெருப்பாகக் காணப்படுகிறது. ரவூப் ஹக்கீம் முஸ்லிம் பொதுமக்களைக் காட்டிக் கொடுக்கப் போகிறார் என்றொரு கதையை உருவாக்கி அவரது எதிர்த்தரப்பினர் செயற்படுகின்றனர். தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி பிரபாகரனானால் முஸ்லிம் மக்களின் ஏகப் பிரதிநிதி நானே எனத் தெரிவித்து விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஹக்கீம் ஒப்பந்தம் செய்துகொண்டமையே மேற்கூறிய கருத்து வேறுபாடுகளுக்கு மூல காரணமாக அமைந்தது எனக் கூறுவது தவறாகாது.

அவ்வாறே கிழக்கு மாகாணத்தில் நிலவும் பிரதேச வாதப்போக்குக்கு எதிராகத் தனது நிலையை ஸ்திரப் படுத்திக்கொள்வது ராவூப்ஹக்கீமுக்குச் சிரமமாக அமையும். ஏனெனில், ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தைச சேராத முஸ்லிம் அரசியல் வாதியாவார். காலஞ்சென்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தலைமைப் பதவியை ஏற்கும்வரை வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேராத தலைவர்களே அவரை இந்நாட்டு முஸ்லிம் மக்களின் தலைவராகக் கருதிவந்தனர்.

கிழக்கு மாகாண அரசியலில் முக்கிய இரு தூண்களாகக் கருதப்படும் ரவூப் ஹக்கீம் மற்றும் பேரியல் அஷ்ரப் ஆகிய இருவருமே வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களல்லர்.

**~அரவிந்த்~**

(08ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

## ஒன்றுபட்டு மீட்பதா? பிரிந்து நின்று வீழ்வதா?

ஒன்றுபட்டு நாட்டை மீட்டெடுப்பதா? அல்லது பிரிந்து நின்று வீழ்ச்சியடைய விடுவதா? - இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

மோதலற்ற அரசியல் மூலம் நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதா? அல்லது சம்பிரதாயபூர்வ அரசியலை - வழமையான மோதல் அரசியலை - பின்பற்றி நாட்டையும் மக்களையும் தொடர்ந்து வீழ்ச்சியடைய விடுவதா? - இதுதான் அவரின் கேள்வி.

ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லமுன்னர் தெற்கில் நீர் மின்சாரத் திட்டம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அரசியலில் தனக்கு எதிர்த்தரப்பில் இருப்போரைப் பார்த்து - குறிப்பாக ஜனாதிபதி குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியினரைப் பார்த்து - அவர் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கின்றார் என்றே கொள்ளவேண்டும்.

ஆட்சியைக் கைப்பற்றும் குறுகிய அரசியல் லாப நோக்கத்தை எட்டுவதற்காக - முழு நாட்டையுமே சீரழிக்கும் இனப்பிரச்சினை விவகாரத்தை மேலும் மோசமடையச் செய்யும் விதத்தில் குழப்பிய பெருமை தென்பகுதி அரசியல்வாதிகளுக்கு - குறிப்பாக சிரேஷ்ட அரசியல் தலைவர்களுக்கு - உண்டு.

பிரதமர் குறிப்பிடுவது போல, இருதசாப்தங்களாக நீடிக்கும் யுத்தத்துக்கு அரசியல் தீர்வு தேவை என்பதை ஐ.தே.முன்னணியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான்.

அதேசமயம், அத்தகைய தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஆட்சியில் இருக்கும் ஒருதரப்பு முயலும் போது, எதிர்க்கட்சியில் இருக்கும் மறுதரப்பு அதை எந்த வகையிலேனும் - இனவாதம் கிளப்பியேனும் - முறியடிக்க வேண்டும் என்பதிலும் அவை இரண்டுமே தீர்க்கமாக இருக்கின்றன; இருந்து வருகின்றன என்பதும் உண்மையே.

இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வுகாண கடந்த பல தசாப்தங்களாக எடுக்கப்பட்ட பல்வேறு சமாதான முயற்சிகள் முறியடிக்கப்பட்டதன் வரலாறே இதற்குச் சான்று.

இந்தப் பிரச்சினையிலிருந்து மீளமுடியாத ஆதங்கத்தின் வெளிப்பாடாகவே "ஒன்றுபட்டு நாட்டை மீட்டெடுப்பதா? அல்லது பிரிந்து நின்று வீழ்ச்சியடைய விடுவதா?" என்ற கேள்வி பிரதமரிடம் இருந்து வெளிப்பட்டிருக்கின்றது.

இலங்கைத் தமிழர்களுக்கு - அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக் கூடிய - நியாயமான தீர்வு ஒன்றை சிங்களப் பேரினவாதம் ஒன்றுபட்டு முன்வைக்கமாட்டாது என்று தமிழ் மக்களின் தலைவர்கள் தொடர்ந்து அவநம்பிக்கை தெரிவித்து வருவதற்கும் இத்தகைய - கடந்த கால - வரலாறே அடிப்படைக் காரணம்.

தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிட்டி - அவர்களுக்கு சுயாதீனமான - சுதந்திரமான - கௌரவமான - வாழ்வு உறுதிப்படுத்தப்படும் வரை தமிழர்களின் ஒரே பலமாக - காவலாக - இருக்கும் ஆயுதங்களைக் கீழே வைக்க மாட்டோம் என்று தமிழர்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் வலியுறுத்திக் கூறுவதற்கும் இந்த வரலாறுதான் காரணம்.

1994 இல் சமாதான தேவதை என்ற பட்டத்தோடுதான் ஜனாதிபதி குமாரதுங்கவை மக்கள் அரசாட்சியில் அமர்த்தினார்கள். அவர் சமாதான முயற்சிகளை முன்னெடுத்த சமயம் எதிரணியில் இருந்த ஐ.தே.கட்சி அதைக் கடுமையாக எதிர்த்து வந்தது.

இப்போது ஆளும்கட்சி ஐ.தே. முன்னணி. அது புலிகளுடன் சமரசம் பேசி, அமைதித் தீர்வு காண முயல்கின்றது. ஆனால், ஜனாதிபதியும் அவரது அணியினரும் மறுபக்கத்தில் போய்நின்று கொண்டு, சமாதான முயற்சிகளுக்கு வேட்டுவைக்கும் விதத்தில், மக்களைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

பெரும்பான்மை சிங்களக் கட்சிகளின் இந்தப் போக்கு, தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்தியதையும், ஆயுதப் போராட்டத்தை அவர்கள் தொடர்வதையும் தொடர்ந்து நியாயப்படுத்தி வருகின்றது.

ஆட்சிக்கனவு என்ற குறுகிய அரசியல் லாபத்தை அடைவதற்கான - இத்தகைய - தனது பாரம்பரிய அரசியல் போக்குகளிலிருந்து பெரும்பான்மைச் சிங்களக்கட்சிகள் தம்மை மாற்றிக்கொள்ளாத வரை இந்தநாட்டுக்கு மீட்சி இல்லை; ஐக்கிய இலங்கைக்குள் அமைதித் தீர்வு என்பதும் சாத்தியமில்லை.

ஒன்றுபட்டு தங்கள் உரிமையை மீட்பது என்பதில் தமிழர்கள் உறுதியாகவும் உரமாகவும் உள்ளார்கள். பிரிந்து நின்று வீழ்வதா என்பதை பெரும்பான்மையினரே முடிவு செய்யவேண்டும்.

# கல்வியங்காடு சந்தையில் புனரமைப்பு வேலைகள்

## ஆரம்பம் என்கிறார் மாநகர ஆணையாளர்

யாழ்ப்பாணம்,செப்.23

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியின் மூலம் கல்வியங்காடு பொதுச்சந்தையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி பணிகள் யாவும் தொகுதி தொகுதியாக நடைபெறவுள்ளதால் தற்போதுள்ள சந்தைக் கட்டடத்தின் சில பகுதிகள் இடிக்கப்பட்டு இவ்விடத்தில் புதியகட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கட்டடத்தின் சில பகுதிகள் இடித்து அகற்றப்பட்டாலும் கூட சந்தையின் அன்றாட வியாபார நடவடிக்கைகள் எவ்வித தடையுமின்றி இடம்பெறுவதற்கு ஏற்ற வகையில் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்படும்.

இச்செயற்பாட்டினால் ஏற்படும் அசௌகரியங்களை சகல வர்த்தகர்களும், வாடிக்கையாளர்களும் சகித்து புனரமைப்புப் பணிக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் - அவர் கேட்டுள்ளார். (எ-10)

## நாட்டு நடப்பு

### நல்லையூர்க் கந்தன் திருப்பள்ளியெழுச்சி (11)

திருநிறை தீர்த்தக் கேணியில் வீழ்ந்து
திரண்டனர் திரள் தோள் வீரர்கள் ஒன்றாய்
வருவது ஏற உறுண்டனர் கேணியில்
உறுண்டனர் பிரண்டனர் ஒன்றாய்
அரும்பிய சேற்று ஊற்றினை அள்ளி
அகமிக மகிழ வீசினர் வெளியே
பருவ மங்கையர் உடுத்த பட்டாடைகளெல்லாம்
பலவகைச் சேற்றினால் தோய
முருகனே! நீயும் முழுதுமாய் நீராடாது
மறுத்தனை கேணி அண்டையே நண்ண
அருகினில் இருந்து அனைத்தையும் கண்டபின்
அகன்றனை பள்ளி எழுந்தருளாயே!

- விகடகவி.

# சட்டவிரோத மணல் அகழ்தலில் கச்சாய் பகுதியில் புதிய யுக்தி!

## 'கையடக்கத் தொலைபேசி'யும் பாவனை!

கொடிகாமம்,செப்.23

கச்சாய் பகுதியில் சட்டவிரோத மணல் அகழும் பணியில் தற்போது புதிய யுக்தியைக் கடைப்பிடித்து வருவதாகத் தெரியவருகிறது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

கச்சாய்ப் பகுதியில் அளவுக்கு அதிகமாக கடல்மட்டத்திற்கு கீழாக ஆழமாகவும், விவசாய நிலங்களை நோக்கியும் மணல் அகழப்பட்டு வந்தது. இதுகுறித்து மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பொதுமக்களும் உயர் அதிகாரிகளிடமும் திணைக்களங்களிடமும் முறைப்பாடு செய்திருந்தன.

இதனை அடுத்து தென்மராட்சி செயலகத்தினால் சூழல் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டதுடன் மணல் அகழ்தல் மற்றும் ஏற்றிச் செல்வதில் புதிய நடைமுறைகளும் அமுல்படுத்தப்பட்டன.

இதன் தொடர் நடவடிக்கையாக சூழல் பாதுகாப்புக்குழு மணல் அகழ்ந்தெடுக்கப்படும் பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்ததுடன், கச்சாய்ப் பகுதியில் மணல் அகழ்ந்தெடுக்கக் கூடியதான நிலையில் அங்கு மணல் இல்லை என்றும் -

அப்பகுதியில் மணல் ஏற்ற அனுமதிக்க முடியாது என்றும் - தீர்மானம் எடுத்திருந்தது.

அத்துடன் கெற்பேலி, பாலாவி, நாவற்குழி, வரணி ஆகிய பகுதிகளில் மணல் ஏற்ற அனுமதிப்பது என்றும் - தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், கிழமையில் குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற 2 நாள்களில் புதிய நடைமுறையின் பிரகாரம் 'பெர்மிட்' எடுத்து மணல் ஏற்ற அனுமதிப்பது என்றும் - தெரிவிக்கப்பட்டு மணல் அகழும் பணி நடைபெற்று வந்தது.

ஆனால், தற்போது இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்கும் சிலர் கச்சாய்ப் பகுதி வாய்க்கால்களில் உள்ள மணலையும் கிணறு வெட்டும்போது பெறப்படும் வெள்ளை மணலையும் அகழ்ந்து செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு மணல் அகழ்வோர் இரவுவேளைகளில் 'டிராக்டர்களில்' மணலை ஏற்றுகின்றனர். பின்னர் அவர்களில் சிலர் மோட்டார் சைக்கிள்களில் 'டிராக்டர்களுக்கு' முன்னால் செல்வதுடன் கையடக்கத் தொலைபேசியின் உதவியுடன் வீதிகளில் இடம்பெறும் ஆள், பொலீஸ் நடமாட்டங்கள் குறித்து 'டிராக்டர்களில்' உள்ளவர்களுக்கு தகவல் கொடுக்கின்றனராம்.

மேற்படி தகவல் பரிமாற்றத்தின் மூலம் ஒருநாளைக்கு குறைந்தது 7 தடவைகள் மணல் அகழ்ந்து எடுத்துச் செல்லப்படுவதாகவும் -

இவ்வாறு கொண்டு செல்லப்படும் ஒரு டிராக்டர் மணல் 3 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் - கூறப்பட்டது. (எ-74)

# குடாநாட்டு அஞ்சல் அலுவலகங்களை மாலை 6 மணிவரை திறக்கவேண்டும்

## தபால் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ். மாவட்டத்தில் உள்ள அஞ்சல் அலுவலகங்கள் அனைத்தும் காலை 7 மணியில் இருந்து மாலை 6 மணி வரையும் வாடிக்கையாளர்களின் வசதியைக் கருத்திற் கொண்டு திறந்திருத்தல் வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா தபால் தொலைத் தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ். மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதம தபாலகத்தில் கடந்த 14ஆம் திகதி பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தற்பொழுது அஞ்சல் அலுவலகங்கள் மாலை 4.30 மணிக்கும் உப அஞ்சல் அலுவலகங்கள் மாலை 5மணிக்கும் தமது பணிகளை நிறுத்திக்கொள்கின்றன என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனை அடுத்து ஏகமனதாக மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அஞ்சல் அலுவலகம் காலை 7 மணியில் இருந்து மாலை 7 மணிவரையும் திறக்கப்படல் வேண்டும், நீண்டகாலமாக வடபகுதித் தபாலகங்களுக்கு வழங்கப்படாமல் உள்ள நலன்புரித்தளபாடங்கள் துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும், யாழ். பிரதம அஞ்சல் அலுவலகம் மாலை 4மணிக்குப் பின்னர் கடிதங்களை வாகனமொன்றின் மூலம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், விரைவில் திறக்கப்படவுள்ள தபாலக கட்டடத்தொகுதி வளாகத்தில் நவீன அஞ்சல் பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்படவேண்டும் என்பன உட்பட முக்கிய 10 தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (ம-10)

# கடற்றொழில் மாநாட்டுக்கு இங்கிருந்து 50 பிரதிநிதிகள்

## யாழ். நீரியல் உதவிப் பணிப்பாளர் தகவல்

அடுத்தமாதம் கொழும்பில் நடைபெறவுள்ள 'கடற்றொழில் புனர் உதயம்' என்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்கென யாழ். குடாநாட்டில் இருந்து கடற்றொழில் சங்கங்களின் 50 பிரதிநிதிகள் கொழும்பு செல்லவுள்ளனர் என நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ். உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

உலக உணவுத் தினமான ஒக்ரோபர் 16 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ விளையாட்டு உள்ளரங்கில் இந்த மாநாடு நடைபெறும்.

மேற்படி மாநாட்டில் கலந்துகொள்வதற்கென நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இருந்து வருகை தரும் 10 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடற்றொழில் மீன்பிடி அமைச்சர் மஹிந்த வீரசேகர தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்வார். (எ-ரி)

### நாளை

புரட்டாதி 07
புதன்கிழமை
(24.09.2003)
திதி : திரயோதசி
பிற்பகல் 12.19 வரை
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் 1.47 வரை
சுபநேரம்: 4.32 - 6.02
ராகுகாலம்: 12.02 - 1.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கல்வியில் முன்னிலையில் இருக்கும் பலர் வாழ்க்கையில் பின்தங்கி விடுவார்கள்.

# மாணவனைக் காணோம் எனப் பெற்றோர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.23

பாடசாலைக்குச் சென்ற மாணவனைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் சுழிபுரத்தைச் சேர்ந்த சின்னராசா சுமரஜித் (வயது 12) என்ற மாணவன் கடந்த 10 ஆம் திகதி பாடசாலைக்கு விசேட வகுப்புக்குச செல்வதாகக் கூறிச் சென்ற பின்னர் வீடு திரும்பவில்லை என்று பெற்றோரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் எஸ்சின்னராசா, சுழிபுரம் என்ற முகவரியுடன் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ம-5)

# குருளைச் சாரணர் தலைவருக்கு மீரிகமவில் தமிழில் பயிற்சிகள்

இலங்கைச் சாரணீயத்தின் குருளைச் சாரணர் தலைவர்களுக்குரிய உயர்தர சின்னப்பயிற்சி அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் 16ஆம் வரை மீரிகம சாரணர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சாரணர் சங்கத்தின் பயிற்சிக்குழு இதனை வழங்கவுள்ளது.

திருமதி கே. குணரத்தினம் தலைமையில் தமிழில் இந்தப் பயிற்சி வழங்கப்படும். 1999ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறும் முதலாவது தமிழ் மொழி மூலப்பயிற்சி இதுவாகும்.

1999ஆம் ஆண்டுக்குப் பின் கலைக்கூறு II பயிற்சியினை பூர்த்தி செய்தவர்கள் இப்பயிற்சி நெறிக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று சாரணர் மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி தொடர்பான விவரங்களை மாவட்ட ஆணையாளர் அல்லது உதவி மாவட்ட ஆணையாளர்களிடம் தொடர்பு கொண்டு பெறலாம் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-31)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி கல்விசாரா ஊழியர்
திரு.சி. சந்திரமோகனின் மாமனார்

## சின்னத்தம்பி கந்தசாமி

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
ய/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

(22894) (26-14)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 04 - 1939

மறைவு 24 - 09 - 2000

## திருமதி புஸ்பராணி சிவப்பிரகாசம்

திதி: அபரபக்க துவாதசி
23.09.2003

அகில ஜோதியாய் பிறந்தாய் அமரதீபமாய் அணைந்தாய்
அணைந்து ஆண்டுகள் மூன்று முடிந்தன
இகவாழ்வு இனிப்போதும் என்று இறை வாழ்வு
தனை தேடிச் சென்றாயோ? இலங்கையில்
இது வேண்டாம் என்று இந்தியாவைத்
தேர்ந்தெடுத்தாயோ? தாயே உன்னை
நினைத்து நாங்கள் வாடுவதை நீ அறிய மாட்டாயோ?
*உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்து*
*உங்கள் நினைவோடு வாழும்:*

**கணவர், மக்கள்,**
**மருமக்கள்.**

*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (22893) (25-14)

தகவல்:
பொ.சிவப்பிரகாசம்.

## வர்த்தக தொழில்துறை மன்ற அலுவலகம் இங்கு திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்றத்தின் அலுவலகத்திறப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நல்லூர் செம்மணி வீதியில் உள்ள மன்ற அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பல வர்த்தக தொழில்த்துறை மன்றங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர். (ம-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ் மாவட்ட விளையாட்டுத்துறையின் வளர்ச்சியை மேன்மேலும் மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்டத்தில் உள்ள விளையாட்டுத்துறை அதிகாரிகள், விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகள், ஆர்வலர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டுத துறைப் பொறுப்பாளர் சிமாதுளன் அறிவித்துள்ளார்.

யாழ்மாவட்டத்தில் உள்ள வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களில் 'பி','சி' தரங்களில் சித்தியடைந்தவர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (ம-8)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,செப்.23

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 3 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுகின்றது.

மாகாண மட்டப் பரீட்சை பற்றி இச்செயலமர்வில் ஆராயப்படவுள்ளதால் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-8)


யாழ்.மாவட்ட
தனியார் பாவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

# மணல் விநியோகம்

எமது சங்கத்தால் கண்டாவளை மணல் (பாலியாற்று மணல்) குறைந்த விலையில் விநியோகம் செய்யப்படுகின்றது. தேவைப்படுவோர் எமது சங்கத்துடன் தொடர்புகொண்டு மணலைப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*215, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி இலக்கம் 021-2225626 (22895) (26-14) நிர்வாகம்.

# DADI ஜெனரேட்டர்



- 10KW
- நிசப்தமானது
- மின்சக்தியில் இயக்கப்படுவது

தொலைபேசி வசதிகளும் கிடைக்கின்றன

சென்ட் அந்தனிஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 2337286, 2337284-5, 2324261-5
விநியோகஸ்தர்
நாராயணா கூட்டுப்பொருட்கள் வர்த்தகம் 96/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics


# 3ஆம் வருட நினைவஞ்சலி



கண்மகிழ 06 - 10 - 1961

கண்நெகிழ 24 - 09 - 2000

அமரர்

## வீரசிங்கம் உதயகுமார் B.Sc.

(ஆசிரியர், யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

நெடிய மூன்றாண்டு நேற்றுப்போல் - எம்
நெஞ்சங்களில் இருள் சூழ்ந்து
வாஞ்சையுடன் வாசலைப் பார்த்தபடி
வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் - எம்
வண்ண மலர்களின் கண்ணாற
வந்திடுவீர்கள் விரைவினிலே.....

*செங்குந்தா வீதி,*
*கல்வியங்காடு.* (22883) (26-14)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்பிற்குரிய ஆருயிர் நண்பன்
செல்வன் சி.ஜோயானந்தன்
(முதலாம் வருட மாணவன், சித்திரமும் வடிவமைப்பும் யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி பத்மாதேவி சிவசுப்பிரமணியம்

அவர்களின் மறைவையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட மாணவர்கள்,
சித்திரமும் வடிவமைப்பும் - யாழ். பல்கலைக்கழகம்.

(22891) (25-14)

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாதேவி சிவசுப்பிரமணியம்

திருமதி பத்மாதேவி சிவசுப்பிரமணியம் அவர்கள் 21.09.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதர் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னர் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் ஜோயிவினி (ஆசிரியர், அல்-அக்சார் தேசிய பாடசாலை-கற்பிட்டி), ஜோய்க்குமார் (P.C.கவுஸ், யாழ்ப்பாணம்), ஜொய்ந்திரன் (கிராமிய வங்கி முகாமையாளர், கற்பிட்டி), ஜோயானந்தன் (நுண்கலைப்பீடம் - மருதனார்மடம்), ஜோயாளினி, ஜோய்ச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாலகிருஷ்ணன் (பனை அபிவிருத்திச்சபை, வேலணை) அவர்களின் அன்பு மாமியாரும் பேபி சியாளினி, சியாமளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புதுவளவு, சுன்னாகத்திலுள்ள மாட்டின் ஜெயராசாவின் இல்லத்திலிருந்து இன்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிக்கு தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*புதுவளவு,*
*சுன்னாகம்.* (22890) (26-14)

தகவல்:
சி. ஜோய்க்குமார்
(மகன்)


# புரோட்டினெக்ஸ்®

நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகிறது.

- 100% தாவரப் புரதம்
- கொலஸ்ரோல் அற்றது
- 15 விட்டமின்களும் கனியுப்புக்களும் அடங்கியது.




போஷணைகள்: புரோட்டீன், விற்றமின் A, விற்றமின் C, விற்றமின் D3 விற்றமின் E, விற்றமின் K3, விற்றமின் B1, விற்றமின் B2, விற்றமின் B6, விற்றமின் B12, நயசினமைட், D-பன்தனோல், பயோட்டின் (f)போலிக்கமிலம், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, கோலின், மோல்ட்.

Astron — Astron Limited., 688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel : 636741 Fax: 636173 E-mail: astron@astron.lk

# பலாலி, காரைநகருக்குள் இராணுவம் முடங்க வேண்டும்; அதுவே தீர்வுக்கு வழி

**ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்கள் பூர்த்தியடைகின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இருதரப்புகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ளது.**

**இக்காலப் பகுதியில் நடந்தவைகள் என்ன, அவை தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன பரிகாரத்தைத் தந்தன என்பன பற்றிய கருத்துக்களை தாங்கி வரும் செவ்விக்களம் இது.**

**வடக்கு - கிழக்கு இடைக்கால சபைக்கு தலைவராக நியமிக்கப்பட்டவரும் முன்னாள் மாநகர ஆணையாளரும் அகில இலங்கை காங்கிரஸ் யாழ். மாவட்ட அமைப்பாளருமான சி.வி.கே சிவஞானம் அளித்த செவ்வி இன்று வெளியாகின்றது. பலரது செவ்விகள் இந்தப் பகுதியில் தொடராக வெளிவரவிருக்கின்றன.**



*கேள்வி:-* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து ஒன்றரை வருடங்கள் கடந்துவிட்டது. மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏதாவது ஏற்பட்டதா?

*பதில்:* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னான முன்னேற்றங்கள் என்றால், ஏ-9 பாதை திறக்கப்பட்டுள்ளது; யுத்தம் இல்லை; அவ்வளவுதான்.

ஆனால், புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் எதிர்பார்க்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னமும ஏற்படவில்லை. அதுவும் இடம்பெயர்ந்த 22 ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இன்னமும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பவில்லை. உடன்படிக்கையில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட இந்த விடயம் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. ஆனபடியால புரிந்துணர்வு உடன்பாட்டின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்கள் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

மக்கள் மீளக்குடியமர முடியாமைக்கு முக்கிய காரணம் உயர் பாதுகாப்பு வலயம். இந்தப் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்ந்த குழுவில் இடம்பெற்ற குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு நான் நேரில் சென்றிருக்கின்றேன். அங்கு பார்த்த விடயங்களை அறிக்கையாக நான் சமர்ப்பித்திருந்தேன். குழுவில் இடம்பெற்ற ஏனையோருடன் முரண்பட்ட நிலையில் அந்த அறிக்கை அமைந்திருந்தது.

பலாலி, காரைநகர், மண்டைதீவு ஆகியவைதான் புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி உயர்பாதுகாப்பு வலயங்கள். ஆனால், இராணுவத்தினரும அவர்களைச் சார்ந்தவர்களும் குடாநாட்டில் கடற்பிரதேசங்களை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்தமை புரிந்துணர்வு உடன்படிக்கையின் முன்னேற்றம் என்று கூறமுடியாது. அதனை பின்னடைவாகவே பார்க்க வேண்டும்.

தமிழ்மக்களும், விடுதலைப் புலிகளும் எதிர்பார்த்ததற்கு மாறாக, புரிந்துணர்வு உடன்படிக்கை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்றுதான் கூறவேண்டும்.

*கேள்வி:-* எந்தவகையான பாதிப்புக்களை ஏற்படுத்தியது?

*பதில்:* இடம்பெயர்ந்த மக்கள் தமது பிரதேசத்துக்கு செல்ல முடியவில்லை. முன்பு மக்கள் போய்வரக் கூடிய இடங்கள் கூட பாதுகாப்பு வலயம் என இப்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அரியாலை, தனங்களப்பு சார்ந்த கடல்பிரதேசம், நாகர்கோவில் கடற்பிரதேசம் மட்டுமல்லாமல் ஒட்டு மொதத்மாக சகல கடற்பிரதேசங்களும் பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்டுள்ளன. இதனால் மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயம் செய்யும் வளமான பிரதேசங்களும் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் தமது தொழிலை மேற்கொள்ளமுடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகருக்குள்ளும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள மக்கள் மட்டுமே தொழில் செய்யக் கூடியதாக இருக்கிறது. தவிர, யாழ். குடாநாட்டுச் சனத்தொகையில் 22 அல்லது 23 சதவீத மக்கள் எதுவும் செய்யமுடியாத நிலையில் அண்டி வாழ்கின்ற நிலையிலும் அகதி வாழ்விலும் தான் தொடர்ந்து தவிக்கின்றனர். இதற்குக் காரணம் பாதுகாப்பு வலயம்தான். புரிந்துணர்வு உடன்படிககைக்குப் பின்தான் இந்நிலை ஏற்பட்டது.

*கேள்வி:-* புரிந்துணர்வு உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்களா?

*பதில்:* புரிந்துணர்வு உடன்படிக்கை நிச்சயமாக மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். அல்லது திருத்தியமைக்கப்பட வேண்டும்.

கடல் சார்ந்த இடங்களில் பல பிணக்குகள் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படைக்கும் இடையில் ஏற்பட்டுள்ளன. கடற்படையைப் பொறுத்த வரையில் ஆரம்பம் முதலே அவர்கள் இந்த உடன்படிக்கைக்கு எதிர்மறையான கருத்தைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடியும்.

கடற்படையினர், உடன்படிக்கையையே சாதகமாகப் பயன்படுத்தி அதற்கு முரணாகச் செயற்படுவதற்கு உடன்படிக்கையும் வழிவகுத்துள்ளது. கடற் பிரதேச நடமாட்டங்கள் சம்பந்தமான ஏற்பாடுகள் இன்னும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கையில் கடல் நடமாட்டம் தொடர்பாக ஒரு பந்தியில்தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

*கேள்வி:-* இராணுவத்தை விலக்கி மக்களை மீளக்குடியமர்த்த என்ன விதமான நடவடிக்கை எடுக்கலாம் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்-* இராணுவம் இந்த மண்ணை விட்டுப் போவதுதான் அதற்குச் சரியான தீர்வு. தமிழ்மக்களின் அபிலாஷையும் அதுதான். அப்படியில்லாவிட்டாலும் கூட, தங்களது முகாம்களுக்குள் இராணுவம் இருக்கலாம். முன்பு பலாலியில் இருந்தது போல்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு தான் நாம் கோருகின்றோம். அந்தப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் போய் முகாம் அமைக்கவோ, சண்டைக்கு ஆயத்தப்படுத்தவோ முடியாது. அதற்கு சாத்தியமே இல்லை. ஆகவே, அப்படியான எண்ணத்தைக் கைவிட்டு அந்த இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்த இராணுவம் முன்வர வேண்டும்.

இப்போதும் மக்கள் மத்தியில் தான் இராணுவத்தினர் இருக்கின்றனர். தொடர்ந்தும் அப்படி இருக்கலாம் அதில் பிரச்சினை இல்லை.

முகாம்களைப் படையினர் சுருக்கினால், மக்கள் தமது தொழிலைச் சுதந்திரமாகச் செய்து இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்ளலாம். பலாலிக்கும் காரைநகருக்கும் தங்களது முகாம்களை நகர்த்தினால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

*கேள்வி:-* பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அடுத்தகட்ட நகர்வு எந்தவகையில் இருக்க வேண்டும் எனக்கருதுகிறீகள்? மக்கள் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா?

*பதில்:-* தமிழ்மக்களின் ஒட்டுமொத்தமான கருத்தும், அபிலாஷைகளும், விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்வு காணவேண்டும் என்பதேயாகும். பேச்சு தடைப்பட்டதற்குக் காரணம் அரசுதான். அரசுக்கு இக்கட்டான நிலையைத் தோற்றுவிப்பவர் ஜனாதிபதி.

தற்சமயம் பந்து ஜனாதிபதியின் கைகளிலும், அரசின் கைகளிலும் தான் இருக்கின்றது.

இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமாயின், அரசும், ஜனாதிபதியும் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பேச்சுக்கள் நிச்சயமாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஆறு கட்டங்கள் பேசிப்பார்த்து இயலாத நிலையில்தான் புலிகள் பேச்சை இடைநிறுத்தினர். அவ்வாறு இடைநிறுத்தியமை ஒரு நல்ல முடிவு. இல்லாவிட்டால் இப்படியே பேச்சுக்கள் இழுபட்டுக் கொண்டு போகும். இழுபட்டுக் கொண்டு போனால் ஜே.ஆர்.ஜயவர்த்தனா கூட்டிய வட்ட மேசை மாநாடுகள் போல, சர்வதேசத்தில் சந்தித்த மாதிரி நிலை ஏற்படும் வாய்ப்பு இருந்தது. இது சரியான நேரத்தில் தவிர்க்கப்பட்டுள்ளது.

*கேள்வி:-* பேச்சு தடைப்பட்டமைக்கு இடைக்கால நிர்வாக சபை காரணமா?

*பதில்:-* நிச்சயமாக இடைக்கால நிர்வாகம் என்பது புதிய விடயம் அல்ல. இடைக்கால நிர்வாகம் 1987 இல் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்போது அதனை மீண்டும் பிரகடனப்படுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

கடந்த 18 வருடத்தின் பின்னர் தங்கள் யோசனைகளை விடுதலைப் புலிகள் முன்வைக்கிறார்கள். இந்த நடவடிக்கை நல்ல முறையில் நடைபெறும் என நாம் திடமாக நம்புகிறோம்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அரசமைப்புக்கு மாறானது; முரணானது என்று கூறுவதை ஏற்க முடியாது. இப்படியான நிர்வாகக் கட்டமைப்பு யுத்தம் நடந்து இணக்கம் ஏற்பட்ட நாடுகளில் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்குள் ஈராக், கொங்கோ, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது. அந்த நாடுகளின் அரசமைப்பு சட்டங்களுக்கு ஏற்ப இவை உருவாக்கப்படவில்லை. விடுதலைப் போராட்டம் நடக்கும் எல்லா நாடுகளிலும் இத்தகைய கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கும் அதனை உருவாக்குவதில் எந்தவித பிரச்சினையும் இல்லை.

வடக்கு - கிழக்கு ஒரு மாகாண ஆட்சிக்கு உட்பட்டது. ஒரு மாகாண சபையில் உள்ள அதிகாரம் கூட இல்லாத இடைக்கால நிர்வாகத்துக்கான ஒரு 'கடதாசியை' அரசு புலிகளிடம் கொடுத்தது பெரிய தவறாகும். சட்டம், ஒழுங்கு, காணி, நிதி போன்றவற்றைப் பற்றி அரசு பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இந்த அதிகாரங்கள் எல்லாம் ஏற்கனவே மாகாண சபைக்கு இருக்கின்றன. 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இதுபற்றிய தெளிவு இருக்கின்றது.

மாகாண சபை சட்டத்தையே - அந்தச் சட்ட ஏற்பாட்டையே - எமக்குத் திருப்தியில்லை என்று கூறியுள்ள தமிழ்மக்களுக்கு அல்லது விடுதலைப் புலிகளுக்கு அதிலும் குறைந்ததொன்றைக் கொடுத்து நிவர்த்திக்க அரசு நினைத்தமை எல்லோரையும் ஏமாற்றும் விடயமாகும்.

உள்ளூராட்சிச் சபைகளை நிர்வகிக்கும் அதிகாரிக்கு சகல அதிகாரமும் இருக்கின்றது. இந்தச் சபையின் அதிகாரங்களில் இருந்துதான் இடைக்கால சபைமுறையை ஆரம்பித்திருக்க வேண்டும். பொலீஸ், நிலம் போன்ற அதிகாரங்கள் ஏற்கனவே உள்ளூராட்சி சபைகளுக்கு உண்டு. அதைச் சேர்த்துக்கொண்டு இடைக்கால அமைப்பு யோசனையை அரசு முன்வைத்திருக்க வேண்டும். ஆனால், அரசின் போக்கு, விசுவாசமற்றதாகவே அமைகின்றது. அல்லது தப்பித்துக் கொள்ள முயலும் வகையில் அமைந்திருக்கிறது.

அடிப்படை மாகாண சபையில் இருந்து மேலே சிந்தித்து வரைவை உருவாக்கியிருந்தால் பிரச்சினை வந்திருக்காது. அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமாகியதும் உடனடியாக இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் கேட்கவில்லை. இப்போது கேட்கவேண்டிய நிலையை உருவாக்கியவர்கள் அரசாங்கத்தினரே.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான ஒரு தெளிவான நிலைப்பாட்டை தேசியத் தலைவர் வே.பிரபாகரன் 1987 ஆம் ஆண்டிலேயே எடுத்திருந்தார். இந்த விடயம் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஏனைய கட்சிகளுக்கு இடமளிக்கும் விடயத்தில் கூட தெளிவான நிலைப்பாடு ஒன்று அன்று தேசியத் தலைவரால் எடுக்கப்பட்டிருந்தது. இந்த விடயத்தை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு எனக்கு உண்டு.

**செவ்வி கண்டவர்**
**குகா**

இடைக்கால சபை குறித்துப் பேசுபவர்களுக்கு அச்சபையின் உண்மை நிலை தெரியாது. சும்மா பேசுகிறார்கள். அதைப்பற்றிப் பேசுவது இப்போது ஒரு நாகரிகமாகப் போயுள்ளது.

1987 இல் முன் வைக்கப்பட்ட இடைக்கால சபையில் 12 பேர் அங்கத்தவர்கள். பெரும்பான்மையான 7 இடங்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும். அந்த ஏழு பேரில் ஓர் இடம் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவிருந்தது.

இதைவிட தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் இருவர் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். அரசு நியமிக்கவிருந்த மூவரில் ஒருவர் முஸ்லிம் பிரதிநிதியாக இருந்தார். இடைக்கால நிர்வாக சபையால் முஸ்லிம் நலன்கள் புறக்கணிக்கப்படும் என்று கூறுவது அர்த்தமற்றது. ஏற்கனவே முஸ்லிம் மக்களுக்கு இடமளித்ததை வரலாறு காட்டுகிறது.

முஸ்லிம்கள் தமக்கும் இடைக்கால சபை தனியாக வேண்டும் என்று கோரி பிரச்சினைகளை உருவாக்காமல் விடுதலைப் புலிகளுடன் பேசி, சரியான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்பதுவே எனது கருத்து.

அன்று முஸ்லிம் மக்களுக்கு

(8ஆம் பக்கம் பார்க்க)



1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி பலாலியில் இடம்பெற்ற சந்திப்பில் தேசியத் தலைவர் பிரபாகரன், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், முன்னாள் இந்தியத்தூதர் ஜே.என்.டிக்ஷிற் ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர். அந்தச் சந்திப்பில் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான உடன்பாடு எட்டப்பட்டது. அந்தச் சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் விவரமும் அங்கு கையளிக்கப்பட்டது.

அன்றைய தினமே அந்தச் சபைக்கான பிரகடனத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வெளியிட்டார். முத்தரப்புக்களான விடுதலைப் புலிகள், இலங்கை அரசு, இந்திய அரசு ஆகியன இணக்கம் கண்டு இந்தச் சபையை பிரகடனம் செய்திருந்தன.

இடைக்கால நிர்வாக சபைக்கு மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதில் எழுந்த சர்ச்சையே பின்னர் அதில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

விடுதலைப் புலிகள் காசி ஆனந்தன், ரெமேஸ் ஆகியோரை மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்தப் பிரேரித்திருந்தனர். ஆனால், ஜே.ஆர். அவர்களின் பெயர்களை நீக்கி, பட்டியலில் அடுத்து இருந்த ரூட் ரவி, ரூட் சிறி ஆகியோரை நியமித்தார். இதை விடுதலைப் புலிகள் ஏற்கவில்லை.

பின்னர் மட்டக்களப்புக்கு பிரதிநிதித்துவம் கிடைக்க வசதியாக, தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட என்னை விலக்கி மட்டக்களப்பைச் சேர்ந்த பத்மநாதனை நியமிக்க விடுதலைப் புலிகள் முயற்சி எடுத்தனர். இந்த ஏற்பாட்டை ஏற்க, ஜே.ஆர் மறுத்தார். இதன் காரணமாக இடைக்கால நிர்வாகம் அமைக்கும் முயற்சி அன்று தோல்வியில் முடிந்தது.

வடக்கு - கிழக்கில் இயங்கும் அரச இயந்திரங்களை ஒன்றிணைந்து அரசியல் ரீதியாக திட்டங்களை முன்னெடுக்கும் நோக்குடனே இடைக்கால சபை யோசனை அப்போதும் சரி, இப்போதும் சரி முன்வைக்கப்பட்டிருந்தது.

## நினைவுகளுடன்
## ஆண்டுகள் நான்கு

அன்னைக்கு 29 - 12 - 1943



ஆண்டவனுக்கு 06 - 10 - 1999

### அமரர் இளையதம்பி மயில்வாகனம்

(லொறி உரிமையாளர்)
திதி: புரட்டாதி துவாதசி
23-09.2003

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
பாசம் மாறவில்லை
அப்பா என்று நாம் அழைக்க
இன்று நீங்கள் இல்லை
பாசத்திற்கு வழிகாட்டி
பாரிலே உயர்த்திவிட்டீர்
ஆறாது எம்துயரம்! எந்நாளும் ஆறாது!!

முகவரி:
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

துயருடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(22870) (26-21-14-12)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 - 12 - 1942



மறைவு 24 - 09 - 2000

### அமரர் நாகலிங்கம் துரைராஜா

திதி: 23-09-2003

அல்லலின்றி அன்பாய் உணவளித்து - "இனி
அருசிருப்பேன் கல்வி புகட்டிடவே"
எனப் பகர்ந்ததும் உணர்ந்திங்கு - நாம்
எந்தையின் பிரிவு மூவாண்டுகள் ஓடினும்
என்றும் ஏக்கத் தவிப்புடன் வாழும்....

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.
(22850) (26-14-12-21)

- குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மனம் மகிழ 1944 - 06 - 27



மனம் நெகிழ 2003 - 08 - 24

### அமரர் தம்பு சிவவடிவேல்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்,
தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி)

இல்லத்தின் ஒளி விளக்காய் இருள் களைந்தீர்
இதயத்தின் தெய்வமென இனிமை செய்தீர்
நல்லறத்து நாயகராய் நலங்கள் ஈந்தீர்
நாடெல்லாம் போற்றநின்று நன்மை சேர்த்தீர்
அல்லலற்று அன்பு மன்னமக்கள் அகத்தால் வாட
ஐயா நீர் அகன்றின்றேன் அவலம் ஈந்தீர்
கல்லொத்த நெஞ்சாரும் கலங்கிச் சோரக்
கதறுகிறேன் வந்தெங்கள் குறைதீர்க்க வாரீரோ?

இன்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

# ஒரே குரலில் பேசக்கூடிய ...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைமை மெதுமெதுவாக வளர்ச்சியடைந்ததன் பிரதிபலனாக தற்போது அம்முஸ்லிம் காங்கிரஸ் பல துண்டுகளாக உடைந்து விட்டது.

இதன் காரணமாக ஒரே நிலைப்பாட்டிலிருந்துகொண்டு ஒரே குரலில் பேசக்கூடிய சந்தர்ப்பம் முஸ்லிம் மக்களை விட்டுக் கைநழுவி விட்டது. அந்த வகையில் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் எதிர்காலம் துரதிர்ஷ்டமானதொரு நிலைமையில் உள்ளது.

முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் பிரதேச ரீதியில் வேறுபாடானவையாகும் வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதில்லை. ஒரே நிலைப்பாட்டில் நின்று குரல் கொடுக்க வேண்டிய தேவை உருவாகும் வேளையில்,

நிலைமைக்கேற்ப நடவடிக்கையில் ஈடுபடுவதேயன்றி, சமூகத்தின் ஒட்டுமொத்தத் தேவை குறித்த சிந்தனை அவர்களிடம் காணப்படுவதில்லை.

அவ்வாறே முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளது கொள்கைகளும் அடிக்கடி வேறுபடுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. அண்மையில் ஜே.வி.பியும், விடுதலைப் புலிகள் அமைப்பும் இனவாதப் போக்குடையனவென ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட்டிருந்தார். அக்கருத்தில் தவறேதும் இல்லை. தம் இனத்துக்காகக் குரல் கொடுக்கும் சகல அமைப்புக்களும் இன்று இனவாதக் கண்ணோட்டத்திலேயே நோக்கப்படுகின்றன.

அந்த வகையில் முஸ்லிம் கட்சிகளும் இனவாதப் போக்குடையவை என்பதையும் விசேடமாகக் குறிப்பிட வேண்டியதில்லை. ஸ்ரீ.ல.சு. கட்சியைப் போன்றே ஐ.தே.கட்சியும் இனவாதக் கட்சியாகும். சகல இடதுசாரிக் கட்சிகளையும் தவிர நாட்டில் இயங்கும் ஏனைய கட்சிகள் யாவும் இனவாதக் கொள்கை கொண்டவையே என்பது நன்றாகத் தெரிகிறது. அவ்விதம் இருக்கையில் ஜே.வி.பி. மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகிய இரண்டும் இனவாதப் போக்குக் கொண்டவை என ஹக்கீம் குறிப்பிட வேண்டிய தேவை எதற்காக எழுந்துள்ளது என்ற வினா எழுகின்றது.

இன்று தாம் வெளியிடும் கருத்து, எதிர்காலத்தில் எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்பதை உணராது தான்தோன்றித்தனமாகக் கருத்துத் தெரிவிக்கும் பழக்கம் இன்றைய அரசியல்வாதிகள் மத்தியில் காணப்படுகிறது. அவர்கள் இன்று தெரிவிக்கும் கருத்துக்களை நாளை மறந்து விடக்கூடும்.

ஆனால், பொதுமக்கள் ஒருபோதும் அவற்றை மறப்பதில்லை. அவற்றின் பிரதிபலிப்புக்களுக்கு பொதுமக்களே முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது.

அது மட்டுமன்றி, அரசியல்வாதிகள் தமது தேவையின் பொருட்டு கட்சி மாறக்கூடிய தன்மை இன்று நிலவுகிறது. அவர்கள் தமது விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் செயற்படுகின்றனரேயன்றி, நாட்டின் நன்மையையோ, ஒருமைப்பாட்டையோ கருதிச் செயற்படுவதில்லை.

எவ்வாறாயினும், இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வை எட்டும் பயணத்தில் வடக்குக் கிழக்கில் வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தினரின் பாதுகாப்பையும், குறிக்கோள்களையும் பற்றிச் சிந்திப்பது நியாயமானதே. அவர்கள் மத்தியில் அது பற்றிய அச்சம் உருவாவது நியாயமானதே. ஆனால், கிழக்கு மாகாணத்தில் குறிப்பிட்டதொரு பகுதி முஸ்லிம்களுக்கான தனியான அலகொன்றாக வழங்கப்படுவது மற்றைய பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் பொதுமக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிப்பதாக அமையாது. இடைக்கால நிர்வாக அமைப்பு உருவாகும் போது அல்லது இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்போது அவ்வப் பகுதிகளில் வாழும் சகல இன மக்களதும் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மிக அவசியமாகும். ✪

# பலாலி, காரைநகருக்குள்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம் அளித்தது போன்று இன்றும் உரிய இடம் அவர்களுக்கு அளிக்கப்படலாம்.

18 வருடங்களுக்குப் பின்னர் இன்று எவ்வாறு தீர்மானம் எடுக்கலாம் என்ற தகுதி விடுதலைப் புலிகளுக்கு உண்டு. எது சரி என்று தேசியத் தலைவர் ஆராய்ந்து முடிவு எடுத்து வருகிறார் என்பதை வரலாறு காட்டியுள்ளது.

முஸ்லிம்கள் இன்று தனிச்சபை பற்றிப் பேசுவது நல்லதல்ல. அது தொடர்பான முடிவை எடுக்கும் பொறுப்பை விடுதலைப் புலிகளிடமே அவர்கள் விட வேண்டும். அந்தக் கட்டமைப்பு எப்படி அமைய வேண்டும் என்ற முடிவை விடுதலைப் புலிகளே எடுக்க வேண்டும். விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் என ஏற்கப்பட்டதால், சகல முடிவுகளையும் அவர்களே எடுக்க வேண்டும்.

1987 ஆம் ஆண்டு தனிமனிதனாக விடுதலைப் புலிகளை ஏக் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொண்டவன் நான். இன்று அதைத்தான் எல்லோரும் 'பாஷனா'கச் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் ஒரு விடயம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. "வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்கள் பாரம்பரிய தாயகம்" என்று -

முஸ்லிம்களும் தமிழ்பேசும் மக்களும் இந்த மண்ணைச் சேர்ந்தவர்கள்தான் அவர்களுக்கு என்ன என்ன உரிமை வழங்க வேண்டும் என்பது தேசியத் தலைவருக்குத் தெளிவாகத் தெரியும். எனவே, பிரச்சினைகளை உருவாக்காமல் அவர்கள் தலைவருடன் பேசவேண்டும்.

*கேள்வி:-* ஏ-9 வீதி திறந்த பின்னர் குடாநாட்டுக்கு ஏராளமான பொருள்கள் வருகின்றன. இதனால் பாதிப்புகள் ஏதும் ஏற்படுகின்றனவா?

*பதில்:-* ஏ-9 பாதை திறந்தபடியால் மக்கள் சுலபமான போக்குவரத்தை மேற்கொள்கின்றார்கள். ஆனால், பொருளாதார ரீதியில் குடாநாட்டு மக்கள் மிகவும் பின்தள்ளப்படுகிறார்கள்.

ஆரியகுளம் குளத்துக்கு அருகில் பார்த்தால் தெரியும், என்ன மாதிரியான வியாபாரங்கள் எல்லாம் நடக்கின்றன என்று. எங்களின் தொழில் வாய்ப்பையும் அது பாதிக்கின்றது. பொருளாதாரத்தைப் பாதிப்பதுடன், யாழ்ப்பாணம் ஒரு தரம் குறைந்த பொருள்களைக் கொட்டும் மையமாகவும் மாறியுள்ளது. இந்த வர்த்தகத்தில் தமிழ் வர்த்தகர்கள் ஈடுபடுவதாக இல்லை.

தரம் குறைந்த பொருள்களை வீதியிலும் சந்தியிலும் வைத்து விலையைக்குறைத்துக் கொடுப்பதால் வர்த்தகர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அத்துடன், பல்வேறு பிரச்சினைகளும உருவாகி வருகின்றது.

போதைபொருள் அச்சுறுத்தலும் ஏற்படுகின்றது. கலாசார சீரழிவுகள் திணிக்கப்படுகின்றன. தற்சமயம் அடாவடித்தனங்கள் அதிகரிப்பதற்கு இவைதான் காரணம்.

உலகத்திலேயே தமிழர் கலாசாரத்தின் தலைமையகம், தலைமைத்துவம், தனித்துவமான பிரதேசம் என்றால் அது யாழ்ப்பாணம்தான். தமிழ் நாட்டில் தமிழர் கலாசாரம் இல்லை. தமிழ் நாட்டிலேயே இல்லாத கலாசாரம் ஒன்று யாழ்ப்பாணத்தில் உருவாகியுள்ளது. இந்த விவகாரத்தில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். பொது அமைப்புக்கள் இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்படாவிட்டால் அபாய நிலை உள்ளது.

## இதயத்தை வருடிச் செல்லும்
## முதலாம் வருட நினைவலைகள்



திருமதி
### த. கிருஸ்ணேஸ்வரி

(ஓய்வுபெற்ற உபதபால் அதிபர் - விளான்)

சொந்த மண்ணில் 1954 - 11 - 30

சுவர்க்க வாசலில் 2002 - 10 - 03

நாமிருக்கும் இடமெல்லாம் நீயிருப்பாய்
என்றெண்ணி தீபங்கள் ஏற்றுவதும்
நினைவான நாள்களிலே நீவருவாய்
என்றெண்ணி கண்மூடாது
விழித்திருப்பதும்
எமக்கு வழக்கமாகி விட்டது
உனக்கிது விளங்கவில்லையம்மா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புமகள்: த.பிரவீனா,
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள்; பெறாமக்கள்,
மருமக்கள்.

அளகாபுரி,
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

(22858) (25-14-12)

# குடாநாட்டின் விவசாய உற்பத்திகளை அடையாளப்படுத்திய கண்காட்சி

**கடந்த 18 ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற மாபெரும் விவசாயக் கண்காட்சி குடாநாட்டு விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாகும். '21ஆம் நூற்றாண்டுக்குரிய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்' என்ற கருப்பொருளை மையமாக வைத்து நடைபெற்ற இக்கண்காட்சி பற்றி இன்றைய 'கமமும் புலமும்' பகுதியில் பார்ப்போம்.**

விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்கள் இணைந்து குடாநாட்டில் முதன்முதலாக நடத்திய இக்கண்காட்சியைக் காண்பதற்காக நாம் சென்ற வேளையில், பாடசாலை மாணவர்களால் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய வளாகம் நிரம்பியிருந்தது. குடாநாட்டின் பல்வேறு பாடசாலைகளில் இருந்தும் வருகைதந்த மாணவர்கள் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டதுடன் மட்டும் நின்றுவிடாது, தமது கல்விச் செயற்பாட்டுக்கு ஏற்ற விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டதையும் காணமுடிந்தது.

நாமும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தவற்றை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டோம். யாவும் பயன்மிகுந்





தனவாகவும் பார்ப்பதற்கு இதமாகவும் இருந்தன. குடாநாட்டின் மண் வகைகளில் இருந்து இலாபகரமான விலங்கு வேளாண்மை வரை எத்தனையோ விடயங்களைப் பார்த்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

கண்காட்சியின் ஆரம்பத்தில் குடாநாட்டின் வரைபடமும் மண்வகைகளும் காணப்பட்டன. பெரும் தொகுதியான 4வகை மண்களும் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த மண்ணில செய்கை பண்ணக்கூடிய பயிர்கள் பற்றியும் அவை குடாநாட்டின் எப்பகுதி

## கமமும் புலமும்

களில் உள்ளன என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் எவ்வகையான பயிர்களை இந்த மண் தொகுதிகளில் செய்கை பண்ணலாம் எனவும் அதில் விவரிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, மனதுக்கு மகிழ்வூட்டும் அலங்காரத் தாவரங்களும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. அவை கண்களுக்குப் பெரும் விருந்தளித்தன. அவற்றைப் பார்த்தபொழுது எமது வீடுகளில் இவை இப்படி நன்றாக வளருமா? என்று மனதுக்குள் எண்ணத் தோன்றியது. அந்தளவிற்கு அவை







உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இரு வகையான அலங்காரத தாவரங்கள் அங்கு காணப்பட்டன. உள்ளகத் தாவரங்கள் மற்றையது வெளியில் வாழும் தாவரங்கள். உள்ளகத் தாவரங்களில் ஐந்தூரியம், ஓர்க்கிட், பெகோனியா, அலிசம், சலத்தியா, டிபன்பக்சியா, டிறசீனா, எப்சியா, கோடிவைன் என்பனவும் -

வெளியில்வாழும் தாவரங்களில் கள்ளி, கோலியாஸ், டுபாய்றோஸ், மொசந்தாஸ், றோஸ், குறோட்டன் இனங்கள், செவ்வந்தி இனங்கள், நித்தியகல்யாணி, கோழிக்கொண்டை என்பனவும் அங்கு காணப்பட்டன. இவற்றைப் பார்வையிடுவதற்கு மாணவிகள் மற்றும் யுவதிகள் கூட்டம் அலைமோதியது. பெண்கள்தான் அலங்காரத்தில் அதிக நாட்டம் கொண்டவர்கள் என்பதால்தானோ என்னவோ? அலங்காரத் தாவரங்களைப் பார்வையிடுவதிலும் அவர்கள் முண்டியடித்தனர்.

இவற்றின் பெயர்கள் மற்றும் பராமரிப்பு முறைகள் பற்றியும் ஓர் அலங்காரப் பெண்தான் அனைவருக்கும் விளக்கமளித்துக்கொண்டிருந்தார்.

அதனைச் செவிமடுத்த நாம், எமது வீட்டிலும் இவ்வாறான அலங்காரத் தாவரங்களை வளர்க்கவேண்டும் என்று எண்ணியபடியே அடுத்த பகுதிக்குச் சென்றோம்.

அங்கு மிகவும் வித்தியாசமான விடயம் ஒன்றைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதாவது, வாழைத் தடல், பேப்பர், பொலித்தீன் மற்றும் வெற்று 'ஜோகட்' கப் ஆகியவற்றில் நாற்றுக்களை உற்பத்தி செய்து நடுகை செய்வது பற்றி ஒருவர் விளக்கமளித்துக் கொண்டிருந்தார். அதிக விலையுடைய பயிர் விதைகளை இவற்றில் இட்டு நாற்றுக்களை உற்பத்தி செய்த பின்னர் அவற்றை உரிய இடங்களில் நடுகை செய்யலாம். இதன் மூலம் இந்தப் பயிர்களில் இருந்து அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம். இது மிகவும் முக்கியமானதொரு தொழில்நுட்ப முறையாகும் - என்றார் அவர்.

இதனையடுத்து, சாதகமற்ற காலங்களில் சூரியஒளி மற்றும் மழைத் தடுப்புக்களின் கீழ் மரக்கறி உற்பத்தி செய்தல் பற்றிப் பார்க்கக்கூடியதாக இருந்தது. பச்சை நிறத்திலான மெல்லிய வலைகளின கீழ் மரக்கறிப் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டிருந்தன. சாதகமற்ற காலநிலையை அனுசரித்து வளர்வதற்கெனவே பச்சை நிறத்திலான வலையினால் சுற்றிவர மறைக்கப்பட்டிருந்தது.

கோவா, கரட், கறிமிளகாய், பீற்றூட் போன்றவற்றுடன் உள்ளூர் மரக்கறிப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டிருந்தன. இதில் தக்காளிப் பயிரானது நல்ல விளைச்சலைக் கொடுத்திருந்தது.

அடுத்து வீட்டுத்தோட்டச் செய்கை பற்றிய விளக்கம் காண்பிக்கப்பட்டது. இது கிராமப்புறம், நகர்ப்புறம் என இரு வகையாகக் காண்பிக்கப்பட்டது. கிராமப்புறங்களில் உள்ள வீடுகளில் வீட்டைச் சுற்றியுள்ள நிலத்தை நன்கு பண்படுத்தி அதில் மரக்கறி, இலைக்கறி, கிழங்கு மற்றும் பழப்பயிர்களைச் செய்கை பண்ணலாம். இதன்மூலம் வீட்டுத்தேவையைப் பூர்த்திசெய்துகொள்வதுடன், சமச்சீர் உணவும் கிடைக்கிறது. இப்பயிர்களுக்கு இரசாயன மருந்துகளைப் பயன்படுத்தத் தேவையில்லை.

நகர்ப்புறங்களில் மிகவும் இடவசதி குறைந்த வீடுகளிலும் சாடிகளில் மரக்கறிச்செய்கையில் ஈடுபடலாம் என்பதை 'மாதர் நலம் பெற மாதிரி வீட்டுத் தோட்டம்' என்று அழகாகக் காட்டியிருந்தார்கள். கத்தரி, வெண்டி, மிளகாய் போன்ற பயிர்களை இவ்வாறு நடுகை செய்யலாம் என்றும் கூறப்பட்டது.

அடுத்து விவசாயிகள் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஊடுபயிர்ச்செய்கை மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை ஆகியவற்றில் ஈடுபடலாம் என்பதற்கு நல்ல சான்றுகள் காட்டப்பட்டிருந்தன. சோளப்பயிர்களுக்கிடையே பயறு, பயற்றை போன்ற பயிர்களைச் செய்கை பண்ணியிருந்தார்கள். குறிப்பிட்ட நிலத்தில் இரண்டு பயிர்களில் இருந்து அடுத்தடுத்து விளைச்சல் பெறுவதன் மூலம் விவசாயி அதிக வருமானம் ஈட்டலாம்.

கரட் மற்றும் நோக்கோல் போன்ற பயிர்களை கலப்புப் பயிர்களாகச் செய்கை பண்ணும்போது, அதிக விளைச்சல் கிடைக்கும். கலப்புப் பயிர்ச் செய்கையில் விவசாயிக்குப் பெரியதொரு நன்மை பயக்கும் விடயமும் உள்ளதென்பதை நாம் அறிந்து கொண்டபோது இவ்வாறான கண்காட்சி வருடத்தில் ஒரு தடவை நடத்தப்பட வேண்டும் என்று எண்ணினோம். அவ்வாறு எண்ண வைத்தது எதுவென்றால் தக்காளி மற்றும் கோவா இரண்டையும் கலப்புப்பயிராகச் செய்கை பண்ணும்போது கோவாப் பயிரில் ஏற்படும் புழுத் தாக்கமானது தக்காளிப் பயிரின் மணத்தின் காரணமாகக் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை அறிந்து கொண்டமைதான்.

இது எத்தனை பேருக்குத் தெரியும். விவசாயிகளுக்குத் தெரிந்தாலும் கூட எம் போன்றவர்களில் எத்தனை பேருக்குத் தெரியாமல் இருந்துள்ள இந்த விடயம் கலப்புப் பயிர்ச்செய்கையின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.

பழப் பயிர்களின் பாதுகாப்புக்கு நவீன தெளிகருவி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதையும் பார்த்தோம். பழப்பயிர்களில் காலநிலை மாற்றத்தால் பூச்சி, புழுத் தாக்கங்களும் நோய்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. இவற்றை அவதானித்து அதற்கேற்ப தாவர பீடைநாசினிகளையோ அல்லது வேறு பரிகாரங்களையோ (உதாரணம்:- புகையூட்டல்) மேற்கொள்ளும்போது அவை கட்டுப்படுத்தப்படுகின்றன. பீடை நாசினிகளையோ அல்லது விவசாயத் திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட இரசாயன மருந்துகளையோ விசிறுவதற்கு நவீன தெளிகருவியைப் பயன்படுத்த முடியும் என்பதையும் காட்டியிருந்தனர்.

தொடர்ந்து பயிர்ச்செய்கை முறைகள் பற்றிப் பார்த்துக்கொண்டிருந்த எமக்குச் சற்று வித்தியாசமான ஒரு விடயத்தையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் உதவியுடன் சுன்னாகம் ப.நோ. கூ. சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற பழங்கள் பதனிடும் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

முழுக்க முழுக்க குடாநாட்டில் கிடைக்கின்ற பழங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட "ஜாம்" வகைகள் மற்றும் கோடியல் வகைகள், சோளம் மா, குரக்கன் மா என்பன அங்கு இருந்தன. வெளியிடங்களில் இருந்து குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்ற



பொருள்களைத் தவிர்த்து உள்ளூர் உற்பத்திப் பொருள்களை நாம் பயன்படுத்தவேண்டும். உள்ளூர் பொருள்களின் சுவையே தனியானது.

இவற்றையெல்லாம் கடந்து வந்த பொழுது கால்நடைகள் தொடர்பான விவரங்களைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. குடாநாட்டுக்கு ஏற்ற மாடு வர்க்கங்கள், ஆடு வர்க்கங்கள் என்பன காணப்பட்டன. அத்துடன், கோழிவளர்ப்பு முறை களும் கோழி இனங்களும் பற்றி அறியக்கூடியதாக இருந்தது. செயற்கைமுறைச் சினைப்படுத்தல் முறைகள் பற்றியும் நவீன கருவிகள் மூலம் அவற்றை மேற்கொள்ளுதல் பற்றியும் கேட்டறிந்து கொண்டோம். அதற்குரிய நவீன கருவிகளையும் பார்த்தோம். அவையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பின்னர் ஓரிடத்துக்குச் சென்ற பொழுது சீமைக்கிளுவை மரங்கள் பச்சைப் பசேலென்று மிகவும் குளிர்மையாகக் காணப்பட்டன. வரிசையாகக் காணப்பட்ட அவற்றின் கீழ் தக்காளியும் மிளகாயும் செய்கை பண்ணப்பட்டிருந்தன. ஏன் இவ்வாறு செய்கை பண்ணப்பட்டுள்ளன? இதனால் பயிர்களுக்குத் தீங்கு எதுவும் ஏற்படாதா? என்று அங்கு நின்றவரிடம் கேட்டோம். இல்லவே இல்லை. இவை நல்லபடி வளரும் என்று கூறியதுடன் இது "வீதிமுறைப் பயிர்ச் செய்கை" என்றும் சொன்னார்.

கிளுவை நிழலும் அதிலிருந்து கிடைக்கின்ற அசேதனப் பசளையும் கீழே உள்ள பயிர்களுக்கு பயனுள்ளதாக அமைகின்றன. கிளுவையில் நைதரசன் 100 கி.கிராம், பொஸ்பரஸ் 6.5 கி.கிராம், பொட்டாசியம் 73 கி.கிராம் உள்ளன. இவை பயிர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. ஓர் ஏக்கரில் உள்ள கிளுவையில் இருந்து 7ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அசேதனப் பசளையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதன் அருமை தெரியாமல் வீடுகளில் உள்ள கிளுவைகளைப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று நினைக்கத் தோன்றியது.

இவை மட்டுமன்றி, எவ்வளவோ விடயங்கள் அங்கு இருந்தன. நீர்ப்பாசன முறைகள், உள் வலயத்திற்கேற்ற நவீன பயிர்ச்செய்கை முறை, நிலைபேறான பயிர்ச்செய்கை, பழப்பயிர் அபிவிருத்திக்கு கத்தரித்தலும் பராமரித்தலும், பழங்களின் அறுவடையின் போது சேதத்தைக் குறைக்கும் அறுவடைக்கருவி அறிமுகம், வாழை உற்பத்தியை அதிகரிப்பதற்கு செறிவு முறைப் பயிர்ச்செய்கை, மூலிகைத் தோட்டம், கூட்டெரு தயாரித்தல், மண் பரிசோதனை, மாறிவரும் உலகில் இயந்திரமயமாக்கல், நோய் மற்றும் நோய்த்தடுப்பு முறைகள், நாற்றுக்கள் என்பனவும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இவ்வற்றையெல்லாம் பார்வையிடுவதற்கு சுமார் 3 மணிநேரத்தைச் செலவிட்ட நாம், இறுதியாக இக்கண்காட்சியின் நோக்கம் பற்றி உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரையிடம் கேட்டோம்.

'21ஆம் நூற்றாண்டுக்குரிய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்' என்ற கருப்பொருளை மையமாக வைத்து நாங்கள் ஏற்பாடு செய்த கண்காட்சியின் நோக்கம் யாதெனில், 'விவசாயிகள், மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் கண்காட்சியைப் பார்வையிட்டு இவற்றின் மூலம் அவர்களுக்குப் புதிய சிந்தனை ஏற்பட வேண்டும் என்பதே ஆகும் - என்றார்.

**ஜெயஸ்ரீ**

மூன்று தினங்களாக நடைபெற்ற கண்காட்சியை 7ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் பார்வையிட்டுள்ளனர். இவர்கள் இக்கருத்துக்களை தமது சிந்தையில் இருத்தி, குடாநாட்டில் மேலும் விவசாயத்தில் பல சாதனைகளைப் புரியவேண்டும் என்று வாழ்த்திவிட்டு நாமும் அங்கிருந்து திரும்பினோம். ★

## வினைத்திறமைகாண் பரீட்சை கொழும்பில்

யாழ்ப்பாணம்,செப்.23

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகஸ்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நவம்பர் மாதம் கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-185)

## ஆஸ்திரேலிய குழு ஒக்.2ஆம் திகதி யாழ். வருகை

யாழ்ப்பாணம்,செப்.23

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவொன்று எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி யாழ். வருகை தரவுள்ளது.

யாழ். வரும் இக்குழுவினர் அரச மற்றும் திணைக்களத் தலைவர்களைச் சந்தித்து யாழ். குடாநாட்டு நிலைமைகள் பற்றி ஆராயவுள்ளதுடன், யுத்தத்தினால் சேதமடைந்த பகுதிகளையும் பார்வையிடவுள்ளனர். (எ-8)

## பண்ணிசை, யோகா வகுப்புகள்

யாழ்ப்பாணம்,செப்.23

இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்பட்டுவரும் பண்ணிசை, யோகாசன மற்றும் தியான வகுப்புகளின் புதிய பிரிவொன்று கடந்த வாரம் நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியது.

ஆர்வலர்கள் அனைவரையும் இவ்வகுப்புகளில் பங்கு பற்றி பயன்பெறுமாறு இந்துகலாசார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து. வைத்திலிங்கம் அறிவித்துள்ளார். (ம-8)

## கனேடிய அரசின் புலமைப் பரிசில்கள்

சண்டிலிப்பாய்,செப்.23

பொதுநல அமைப்பு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் கனடா அரசினால் வழங்கப்படும் பட்டப்பின் படிப்பு புலமைப் பரிசில்களுக்குத் தகுதியுடையோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்வைத்தியம், மருத்துவம் ஆகியன தவிர்ந்த ஏனைய துறைகளில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான விண்ணப்ப முடிவுதினம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலாளர், மூன்றாம் நிலைக் கல்வி பயிற்சி அமைச்சு, 18, வோட் பிளேஸ் கொழும்பு - 7 என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புலமைப் பரிசில்கள் தொடர்பான முழு விவரங்களும் கடந்த 19ஆம் திகதி வெள்ளிக் கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. (ம-135)


### வேலையாள் தேவை

Photo Shop and Photo editing செய்யக்கூடிய ஒருவர் தேவை.

தொடர்பு:
NORTH COM WORLD,
No. 415, Navalar Road,
Jaffna.
T.P. 021 222 6092.
(22857) (26-15-19)

### விற்பனைக்கு

தச்சவேலை செய்யும் சைனா மெசின்கள் 10",12",14",16" ஆகியனவும் பிளேனர் மெசின்கள், அலுமினிய கட்டிங்மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர்கள், வெல்டிங் பிளாண்ற் இவற்றுக்கான உதிரிப்பாகங்களும் வேறு வகையான மின் சாதனங்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
வி. சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.
(21-15-19) (C/30297)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 15 - 12 - 1915
விண்ணில் 24 - 08 - 2003

### திருமதி பூமணி சுப்பிரமணியம்

திதி: 23-09-2003

நோய் என்று இருப்பதெல்லாம் சோம்பேறித்தனம்
என்று காலன் வரும் வரை கருமையாய் உழைத்தெம்மை
பெருமையாய் வாழ வைத்து பேருவகை கண்டதாயே?
நோயில் அழுந்தாமல் நொடியினில் மறைந்து
ஊமைகளாய் எம்மை அழவைத்ததேன் அம்மா?

அம்மா என்றழைக்க யாருமற்ற அனாதைகளாய்
தவிக்கின்ற நாம் செய்த பாவம் என்ன சொல்லம்மா?
கதறியழுதும் காப்பாற்ற வில்லையே கல்லோ கடவுள் என
கதிகலங்கி அழுகையிலும் கைகூப்பி வேண்டுகின்றோம்
எங்கள் அன்புத் தாயின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென்று.

- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சுதுமலை மத்தி, மானிப்பாய். (C/30261)(21-15-19)

## நீங்காத நினைவுகளுடன்



தோற்றம் 01 - 01 - 1934
மறைவு 24 - 09 - 1992

### அமரர் சிதம்பரப்பிள்ளை சிவகுரு

(உதவி ஆணையாளர், வடக்கு - கிழக்கு மாகாணசபை திருகோணமலை)

திதி: 23-09-2003

ஊர்மதிக்க வாழ்ந்து உலகறியப் புகழ்நாட்டி
எமையெல்லாம் உயர்வடைய வைத்த தெய்வமே!
ஏன் அப்பா! எங்களைத் தவிக்கவிட்டுச் சென்றாய்?
பதினொரு அகவைகள் அரை நொடியில் போனதுவே
ஒளி தந்து உயர்வளித்த எம் தந்தையே!
ஓராயிரம் அகவைகள் நினைவுகள் தொடரும்!

மத்தொனி,கரவெட்டி. (22714) - குடும்பத்தினர். (21-15-19)

20% - 25% தள்ளுபடி

COSMO டீசல் ஜெனரேட்டர்ஸ்




- 5 வர்க்கங்கள்
- 1.8KW முதல் 10KW வரை
- சப்தமற்ற வர்க்கங்கள்
- மின்சாரத்தினால் அல்லது கைகளினால் இயக்கக்கூடியவை
- எண்ணெய் குறையும் நிலையில் தானாகவே இயக்கத்தை நிறுத்திக்கொள்பவை

மேலும் விபரங்களுக்கு:
செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி. 2337286, 2337283-5, 2324261-5
விநியோகஸ்தர்:
நாராயணா கூட்டப்பொருட்கள் வர்த்தகம், 85/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



மலர்வு 20 - 08 - 1912
உதிர்வு 24 - 08 - 2003

அமரர்

### மாரிமுத்து இராசரெத்தினம்

அன்புடனும் பாசத்துடனும் எமை
அணைத்து வளர்த்த தெய்வமே!
இன்பமெல்லாம் நிறைவாக
இணைந்து நின்ற பாசநிலவே!
உன்நினைவால் எம் கண்களை
ஏன்குளமாய் மாற்றிவிட்டீர்?
நாம் கண்ணீரில் நனைகின்றோம்.
உம்நினைவால் உருகுகின்றோம்!

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்வதோடு, தொடர்ந்து இடம் பெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அன்புப்பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்,
பூட்டப்பிள்ளைகள்.

கோயில் வீதி,
சங்கானை. (22683) (26-21-15-19)


பொதுவான களைகள், வேர்த்தண்டுக் கிழங்குள்ள களைகளை சிறப்பாக கட்டுப்படுத்த

டிஸ்ட்ரோய்



FINCHEM AGRO DIVISION

பீன்கெம்

பீ.ஏ.எஸ்.எவ்.பீன்லே(பிரைவெட்) லிமிட்டெட்,
186, வொக்ஸ்சோல் வீதி,
கொழும்பு - 02

மேட்டு சேற்று நில விவசாயத்தை - காப்பாற்றும்

பீடைநாசினிகள் ஆபத்தானவை அவதானமாகக் கையாளுங்கள்

# யாழ். தொழில்நுட்ப நிறுவகத்துக்கு இருபாலையில் நிரந்தரக் கட்டடம்

## காணி தெரியப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவகத்துக்கான நிரந்தரக் கட்டடம் இருபாலையில் அமைக்கப்படவிருக்கிறது என அந்நிறுவனத்தின் அதிபர் ரி.ராஜரட்ணம் தெரிவித்தார். இதற்கான காணியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் தனியார் கட்டடம் ஒன்றில் வசதிகள் ஏதும் இன்றி இயங்கி வருகிறது என்றும் -

அந்நிறுவனத்துக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைக்க உதவவேண்டும் என்றும் -

நிறுவனத்தின் மாணவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், விடுதலைப் புலிகளிடமும் கடந்த பல காலமாகக் கோரி வந்தனர்.

இந்த விடயத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலையிட்டு பல தரப்பினருடனும் பேச்சு நடத்தி இருபாலையில் பொதுக்காணி ஒன்றை பெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

இந்தக் காணியில நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு மூன்றாம் நிலைக கல்வி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா,யாழ். அரச அதிபர் ஆகியோர் நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர்.

அத்துடன், தற்போதுள்ள இடத்தில் அமைந்துள்ள கொட்டில்களை தற்காலிக ஏற்பாடாக திருத்துவதற்கு 2 லட்சம் ரூபாவை மாவை சேனாதிராசா வழங்க முன்வந்துள்ளார். இந்த நிதியில் அவை புனரமைக்கப்படவிருக்கின்றன.

- இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3-12)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த மூவருக்கு தலா ரூ. 3 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,செப்.23

அனுமதிப்பத்திரமின்றி உழவு யந்திரத்தில் மணல் ஏற்றிவந்த குற்றச்சாட்டின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

தபாற்கட்டை வீதி, அரியாலையைச் சேர்ந்த தம்பிராசா சுதாகரன், சந்திரபுரம் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்வரத்தினம் விஜயருபன் மற்றும் மறவன்புலோ சாவகச்சேரியைச் சேர்ந்த முருகன் ஜெயானந்தராசா ஆகிய மூவரையும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறும் -

கைப்பற்றப்பட்ட மூன்று 'லோட்' மணலையும் இருபாலை காணான் சிறுவர் இல்லத்தில் இடம்பெறும் புனரமைப்புப் பணிகளுக்கு வழங்குமாறும் - யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார். (ம-5)

# அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளாமல் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

ஏறாவூர்,செப்.23

"இலங்கையில் வாழும் அனைத்து சிறுபான்மைச் சமூக மக்கள் மத்தியிலும் சுயாட்சி சம்பந்தமான வேட்கை நன்றாக வளர்ந்துவிட்டது. அனைத்து சமூக மக்களும் தம்மைத்தாமே ஆளவேண்டுமென நினைக்கிறார்கள். எனவே, அரசாங்கம் அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளாமல் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் வாழைச்சேனையில் நடைபெற்ற வன செயல்களின் போது பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்துக்குக் குறுக்கே நின்றுகொண்டு அவர்களது அபிலாஷைகளைக் கொச்சைப்படுத்துகின்ற ஒரு தலைமைத்துவமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் ஒரு போதும் செயற்பட்டதில்லை. வடக்கு - கிழக்கு மாகாணத்திலே நிலத்தைப் பிரிக்காமல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் ஆயத்தமாக இருந்து வருகின்றது.

இலங்கை அரசு தன்னிடமுள்ள அதிகாரங்களை இலங்கையில் வாழும மூன்று சமூகங்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் பக்குவமாகவும், நிதானமாகவும் செயற்படுவதே எமது விமோசனத்திற்கான ஒரே வழி. ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை ஒடுக்க முற்படுவதாலேயே கலவரங்கள் ஏற்பட்டு, பின்னர் அவை யுத்தமாக மாறியது. எமது நாட்டில் கடந்த காலங்களில் அனைத்து விடயங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பாரபட்சமான மனப்போக்கே இன்று ஒரு பயங்கரமான இனப்பிரச்சினைக்கு எம்மை முகம்கொடுக்க வைத்துள்ளது.

சமூகங்களுக்கிடையில் அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதன் மூலம் எதையுமே சாதித்துவிட முடியாது. தமிழ், முஸ்லிம் சிங்கள மக்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துவதன் மூலமாகவே இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு விவகாரத்தில் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் அனைத்துத் தரப்பினராலும் மீறப்பட்டுள்ளன. இதனாலதான் தற்போது கிழக்கு மாகாணத்தில் அடிக்கடி அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன.

- இப்படி அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

புனர்வாழ்வு அதிகாரசபையின் இணைப்பாளர் எம்.ரி.எம்.பரீத் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வடமைப்புப் பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத், றெப்பியர் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி எஸ்.நியாமுதீன், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். (ம)

# யாழ்.ஆஸ்பத்திரியில் கண் சத்திரசிகிச்சை

லண்டனில் இருந்து வருகை தந்த கண் வைத்திய நிபுணர்கள் குழுவொன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்சத்திரசிகிச்சையை மேற்கொண்டு வருகின்றது.

இக்குழுவில் 6வைத்திய நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர். கடந்த 15ஆம் திகதி வருகைதந்த இவர்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு இதுவரை சிகிச்சை வழங்கியுள்ளனர். (எ-10-139)

# பொங்கு தமிழ் பற்றிய பெரும்பான்மையினர் கருத்துக்கள்....

**இந்நாட்டின் தமிழ் மக்களது எதிர்பார்ப்புக்களையும் சுதந்திர வேட்கையையும் இந்நாட்டின் அனைத்துப் பொது மக்களுக்கும் - ஏன் உலகத்தின் ஏனைய நாடுகளுக்கும் - எடுத்துக்கூறும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்படும் 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சி குறித்து நம் நாட்டு அரசியல் வாதிகள் சிலரது கருத்துக்களை வவுனியாவில் பொங்கு தமிழ் நிகழ்ச்சி கொண்டாடப்படும் இவ்வேளையில் வாசகர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது பொருத்தமுடையதே. லக்பிம இதழில் வெளியான 'குசும் விக்கிரமசிங்க'வின் ஆக்கத்தின் தமிழாக்கம் இது.**

### புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவநாணயக்கார



பௌத்த சிங்களவர்களாகிய நாம் அசலபெரகர மற்றும் கதிர்காம உற்சவம் ஆகிய விழாக்களைக் கொண்டாடுகின்றோம். இப்படியிருக்கையில், தமிழ்மக்கள் கொண்டாடும் விழாவை நாம் எதற்காக எதிர்க்க வேண்டும்?

அவர்களது கலாசார உரிமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டுமென நான் கருதுகிறேன். ஒருமைப்பாட்டை வளர்த்துக்கொள்ள அது வழிவகுக்கும்.

இப்'பொங்கு தமிழ்' விழா ஒரு சமய சம்பந்தமான விழாவல்ல என்பது உண்மையே. அது அரசியல் மற்றும் கலாசாரத்தோற்றத்தைக் கொண்டது. ஆனால், சிங்களவர்களாகிய நாமும் கலை, கலாசார விழாக்களை நடத்துகிறோம் அல்லவா? அவற்றின் மூலமும் அரசியல் தோற்றம் வெளிப்படுத்தப்படுகிறது.

சுதந்திரத்தின் பெருமையை வெளிப்படுத்தும் உரிமை விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் உண்டு. அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஓர் அரசென்பது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லீம் ஆகிய சகல இனப்பிரிவினரையும் உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்பட்டதாகும். ஆதலால் கட்டாயமாக இவ்வகை நடவடிக்கைகளுக்கு அரசு அனுசரணை வழங்கியாக வேண்டும். இது தவறிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

ஜே.வி.பியினர் மரணமடைந்த தமது முன்னணியைச் சேர்ந்தோரை நினைவு கூருவதில்லையா? வேறு சிலர் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லையா? சகல மனிதர்களுக்கும் தமது அரசியல் மற்றும் கலாசாரத்தைப் பேணுவதற்கான உரிமை உள்ளது. அவ்வாறே தமிழ் மக்களிடையேயும் வீர புருஷர்கள் உள்ளனர். ஆனால், சகலரும் அந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாதிருக்கக்கூடும். அதற்கு உடன்பாடு இல்லை எனக்கூறி அவ்வித நிகழ்ச்சியை நடத்த இடமளிக்காது இருக்கமுடியாது.

'பொங்குதமிழ்' நிகழ்ச்சி மூலம் அவர்கள் தமது வீரம் மற்றும் சுதந்திரம் குறித்த ஆவல் என்பவற்றை வெளிப்படுத்த விழைகின்றனர்.

நாம் அதற்கு இடையூறு செய்தல் ஆகாது. விரும்பினால் நாமும் இவ்வகையான நிகழ்ச்சிகளை நடத்த இயலும். அவற்றினூடாக சிங்கள வீர புருஷர்கள் பற்றியும் சிங்கள மக்களது எதிர்காலம் மற்றும் அவர்களது எதிர்பார்ப்புக்கள் தொடர்பான எமது உணர்வுகளை வெளிப்படுத்த இயலும்.

### பொ.ஐ.முன்னணிப் பொதுச் செயலாளர் தி.மு.ஜயரத்ன.



இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சி நடத்தப்பட்டவேளையில் பாதுகாப்புப் படையினர் ஒதுங்கிக் கொண்டனர். அவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது கலாசார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவல்ல.

சிங்கள பாதுகாப்புப் படையினர் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்கும் அவர்களை இம்சைப்படுத்தும் குரூரபோக்குடையவர்கள் என்ற விதத்திலே இப் 'பொங்குதமிழ்' நிகழ்ச்சியில் கருத்து வெளியிடப்பட்டது. சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களது விரோதிகள் என்ற விதத்தில் வர்ணிக்கப்பட்டது. இதன் மூலம் சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகத்தினருக்கெதிராக விரோதம் பாராட்டும் தமிழ்குழுக்கள் மேன்மேலும் உருவாகச் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதே எனது கருத்து.

இவ்வகை நிகழ்ச்சிகளை நடத்த உதவுவதன் மூலம் இதுவரை தான் முன்னெடுத்துச் சென்ற சமாதான முயற்சிகளுக்கு அரசு ஊறு விளைவிக்கத் தயாராவதாகவே என்னால் கூறஇயலும்.

இப் 'பொங்குதமிழ்' நிகழ்ச்சி இனவாத அடிப்படையில் அல்லாது ஏனைய சமூகத்தினருடனும் இணைந்த சமமான கலாசார உரிமைகளை நிலைநிறுத்தும் நோக்கில் நடத்தப்படுமாயின் அது தவறாகாது.

அரச ஊழியர்கள் இதில் பங்கு கொள்வது இனவாதத்துக்கு உரமிடுவது போன்றதாகும். இது எரியும் நெருப்பை எண்ணை ஊற்றி வளர்த்த செயல் போன்றதாகும்.

ஸ்ரீலங்காவின் சகல இனத்தவர்களும் எப்போதும் ஒன்றிணைந்து செயற்பட்டவர்கள். இவ்வித செயற்பாடுகள் மூலம் ஒன்றிணைந்த ஸ்ரீலங்கா மக்கள் என்ற நிலையை ஒருபோதும் உருவாக்க இயலாது போய்விடும். இதன்மூலம் உருவாக்கப்படும் உணர்வுகள் ஏனைய சமூகத்தினரைக் குரோத மனப்பான்மையுடன் நோக்கும் நிலை வளர வழிவகுக்கும்.

அரசு மற்றும் அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பை இவ்வகை நிகழ்ச்சிகளுக்கு வழங்குவதற்கு முன்னர் மீண்டும் ஒரு தடவை இது பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது சிறப்புடையது என்பது எனது கருத்தாகும்.

### சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன.



'பொங்கு தமிழ்' என்பதன் அர்த்தம் என்ன? தமிழ் எழுச்சி இதன் மூலம் அவர்கள் தமது கருத்துக்களை தெளிவான வகையில் வெளிப்படுத்த முனைகின்றனர்.

இந்த நிகழ்ச்சி மூலம் வடக்கு - கிழக்கு பகுதிகள் தமது பாரம்பரிய வாழ்விடங்கள் என்பதை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த விளைகின்றனர்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு அரசு அனுசரணை வழங்க முனையுமாயின் அவர்களை ராஜதுரோகிகள் என்றே என்னால் கருத இயலும்.

அன்று விடுதலைப் புலிகள் அமைப்பு தனது பலத்தால் கைபற்றிய பிரதேசங்களில் மட்டும் அரங்கேற்றப்பட்டு வந்த இந்த நிகழ்வு இன்று அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலும் மேடையேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வகை நிகழ்ச்சிகளில் அரச அதிகாரிகள் கலந்து கொள்வதில் தவறேதும் இல்லையென கருத்து வெளியிட்டதன் மூலம் பொது நிர்வாக அமைச்சர் தாபனக் கோவையின் சகல விதிகளையும் மீறியுள்ளாரென நான் கருதுகிறேன்.

இவ்வித கருத்தை வெளியிட்ட அமைச்சர், காலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். முதலில் அவர் காலி - கராபிடிய வைத்திய கலாசாலைக்குச் சென்று மூளைப் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற 'பொங்குதமிழ்' நிகழ்ச்சியில் பிரதமரின் ஊடகத்துறை அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள். உத்தியோகபூர்வமாக அந்நிகழ்ச்சிக்கு அவர்களால் கௌரவம் வழங்கப்பட்டது. எனது கருத்துப்படி இவ்வாறான நிகழ்ச்சிகளை அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடத்த முடியாதவாறு தடை செய்யவேண்டும்.

### பொதுநிர்வாக புனர்நிர்மாண அமைச்சர் வஜித அபேவர்த்தன.



தீவிர யுத்தமொன்றில் ஈடுபட்டிருந்த தரப்பினர் இன்று சமாதான வழிக்குத் திரும்பியுள்ளனர். கைகளில் ஆயுதமேந்துவதைக் கைவிட்டு அவர்களை கலாசார நிகழ்சிகள் மூலம் தமது கலைத்திறனையும், ஒன்றிணைத்து தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதன் மூலம் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முயல்வது எவ்வாறு தவறாகும்? என முதலில் நான் வினவ விரும்புகிறேன். விடுதலைப் புலிகள் அமைப்பு இப்பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளை நடத்துவது சமாதானத்தை அடையும் நோக்கத்துடன் என்பதால், அதற்கு அரசு அனுசரணை வழங்குவதில் தவறேதும் கிடையாது.

மிக நீண்ட காலமாக இந்த அரசு மட்டுமல்ல, இந்நாட்டுப் பொதுமக்களும் சமாதானம் குறித்த எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

வவுனியாவில் நடத்தப்படும் 'பொங்குதமிழ்' நிகழ்ச்சி தொடர்பாக பாதுகாப்புப் படையினர் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கும் இந்நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகவே இப்பிரச்சினை உருவாயிற்று.

சமாதானம் தொடர்பான பயணத்தில் கருத்து வேறுபாடுகளை உருவாக்கிக் கொள்வதை விட அம் முயற்சிக்கு அனுசரணையளிப்பது மிகப் பொருத்தமானதாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஜனநாயக வழிக்கு வந்திருப்பது குறித்து நாம் அவர்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும். அதேவிதமாக யுத்தத்தைக் கைவிட்டு அவர்கள் மேற்கொள்ளும் பயணத்துக்கு உதவ வேண்டியது அரசு என்ற வகையில் எமது கடப்பாடாகும். யுத்த நோக்கமற்ற எந்தவித நடவடிக்கைகளுக்கும் அரசு அனுகூலமான விதத்தில் உதவும்.

ஜனநாயக ரீதியிலான எவ்வகையிலமைந்த சுதந்திரமான கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பது சிறந்ததொரு செயற்பாடாகும். அவ்வகை முயற்சிகளுக்கு அரச அதிகாரிகளுக்கு மட்டுமல்லாது அமைச்சர்களான எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அந்நிகழ்ச்சிகளில் நாமும் கலந்து கொள்வோம்.

*தமிழில்: வியெஸ்ரி*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

K.K.S. றோட், உப்புமடப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில், ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடனும் வீடு 5 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 071 234 7564. (22867)

## தேவை

வெல்டிங் வேலை, மைப்கதிரை, தகட்டுவேலை தெரிந்தவர்கள் தேவை. திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும்.
மாருதி தளபாட மாளிகை
300, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (22887) (12)

## விற்பனைக்கு

சிவன்கோவிலடி, சாவகச்சேரியில் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) 1 3/4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
சாய்ராம் பார்மஸி
சங்கத்தானை, சாவகச்சேரி. (22851) (12)

## விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள், மணல், சல்லி விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.சேகர், 162, அரசடி வீதி (டயனா கொமினிகேசன் முன்பாக), நல்லூர். T.P 3146, 0712 347473. (22844)

சினையுடன் சனல் ஆடு, ஒரு போத்தல் பாலுடன் கலப்பின ஆடு, 1 1/2 வயது ஜேர்மன் சப்பேட் ஆண், பெண் நாய்கள், குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 57, K.K.S. வீதி (கொக்குவில் சந்திக்கும் பூநாறி மர சந்திக்கும் இடையில்). (22856)

நல்ல நிலையிலான ஆறு அடி உயரமான கண்ணாடியுடனான அலுமாரி விற்பனைக்குண்டு. தொடர்பு: P.S.ராஜா, இல.90, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (22874)

## காணி விற்பனைக்கு

வட்டு. கிழக்கு இந்துக் கல்லூரிக்கு முன்பாக, கலைநகர் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி முத்துவேலுப்பிள்ளை, வட்டு. கிழக்கு சித்தன்கேணி (Forut அருகில்). (22879)

## காணி தேவை

கழிபுரம் மூளாய் வீதியில் அல்லது மூளாய் சந்திக்கண்மையில் கனணிப்பயிற்சி நிலையம் அமைப்பதற்கு 3 அல்லது 4 பரப்புக் காணி உடன் தேவைப்படுகின்றது. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி இல. 222-2383, 222-6344. (22876)

## தவறிவிட்டது

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சண்முகநாசன் சிவபாலன் என்பவரது தேசிய அடையாள அட்டை (663561103V), விசேட அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை (தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை) என்பன 15.09.2003 அன்று அளவெட்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கேணிக்கரை, அளவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (22865)

பா.உதயகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 790765745V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் லைடன் பாம், இராசவீதி, கோப்பாய் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (22863)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசமணி மலர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல347221465V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.126/4 கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் அல்லது 0777 496291 T.P. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (22869)

த.திலீப் என்பவருடைய உடைகளும் புத்தகங்களும் அடங்கிய பாக் 18-09-2003 அன்று குப்பிளானுக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.சண்முகலிங்கம் (சோதிடர்), தாவடி தெற்கு, கொக்குவில் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.(22868)

குணசேகரம் குணதீபன் என்பவரது 'பன்சர்' மோட்டார் சைக்கிளின் பில், கிளியறன்ஸ் என்பன 21.09.2003 அன்று மூளாய்க்கும் சுதுமலை பீச் சுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பில்லில் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P 077-6154197. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (22875)

## தேவை

கணிய அளவீட்டாளர் - பயிலுநர்

உட்கட்டுமானத்துறையில் ஆர்வமுள்ள, மேற்படி பதவியுடன் தொடர்புள்ள தொழில்நுட்பக் கல்வியைப் பெற்றுள்ள, விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விள.இல.2049 மே/பா உதயன். (22871) (12-21-14)

## விற்பனைக்கு



யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட....

- ✲ குளிர்சாதனப்பெட்டிகள் (Fridge-Fast Forwarding Ice) (கடைகள், ஹோட்டல்கள், கூல்பார்களுக்கு ஏற்றது)
- ✲ உடுப்பு கழுவும் இயந்திரம்
- ✲ காஸ் அடுப்புகள்
- ✲ தையல் மெஷின்கள்
- ✲ அறை குளிரூட்டிகள்
- ✲ வர்ண டெலிவிஷன்கள் (தவணை முறையில் வழங்கப்படும்)
- ✲ சைக்கிள்கள்



வியக்கத்தக்க குறைந்த விலையில் விற்பனையாகின்றன....
சகலவற்றிற்கும் உத்தரவாதம் அளிக்கப்படும்
விரையுங்கள்..... வந்து பாருங்கள்!

**சித்தி விநாயகர் யப்பான் சைக்கிள் (B) பசார்**

631, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 3500 0777 203537
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகில்)
(22885) (26-21-14-12)

## வாழும் கலை

### (யோகாசனம்)

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும்
யோகாசன வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.
ஆசனம், பிராணாயாமம், கிரியா, முத்ரா, தியானம்
ஆகிய பயிற்சிகள் அனைத்தும் அளிக்கப்படும்.
**இந்தப் பயிற்சியின் மூலம் நீங்கள் அடைவது....**

- ✪ ஆஸ்துமா, ஒற்றைத்தலைவலி, இரத்தஅழுத்தம், இடுப்புவலி, முட்டுவலி, முதுகுவலி, மாதவிலக்கு வலி, கைவலிப்பு, தூக்கமின்மை, ஒவ்வாமை, நீரிழிவு போன்றவற்றிலிருந்து விடுபட்டு வாழ்நாள் நீடித்து, வளம் பெருகி உடல், மனம், ஆன்மா அளவில் சுகம்பெறும் வழி காணுதல்.
- ✪ உடல், மனம், ஆத்மா ஒருங்கிணைந்த வளர்ச்சி கண்டு தன்னை உணர்ந்து இன்புறுதல்.
- ✪ நினைவாற்றல் அதிகரித்தல், நீடித்த இளமையுடன் இருத்தல்.
- ✪ பிரச்சினைகளை எளிதாகத் தீர்த்தல்.
- ✪ செயற்படும் திறன், வாழ்க்கைத்தரம் பன்மடங்கு மேம்படுதல்.
- ✪ சமுதாயத்திலும், குடும்பத்திலும் நல்லுறவு மேம்படுதல்.
- ✪ கல்வியில், பணியில் முழுக்கவனம் செலுத்துதல்.
- ✪ சரியான நேரத்தில் சரியான முடிவெடுத்தல்.
- ✪ கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஊசலாடும் மனம், நிகழ்காலத்தில் நிலைத்தல்.
- ✪ உச்சக்கட்ட விழிப்பு நிலையால் தெளிவான சிந்தனைகள், நூதனயுக்தி, அணுகுமுறை, படைப்பாற்றல், உள்ளுணர்வு பெற்று சிறந்த முறையில் செயற்படுதல்.

வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளது

ஆசிரியர்: ம.நேசராஜ்
NATIYAKALAMANY
(அண்ணாமலை பல்கலைக்கழகம், இந்தியா)
Diploma in yoga Therapy,
D.Yoga,
D.H.I. Home,
M.I.B.R.
M.S. Ist Year
T.P. 077-6156570.

தொடர்புகொள்ள வேண்டியமுகவரிகள்:

| | |
|---|---|
| குமார் | ஐங்கரன் |
| தொலைத்தொடர்பகம் | தொலைத் தொடர்பு சேவை |
| பலாலி வீதி, | பலாலி வீதி, |
| உரும்பிராய் இந்துக் கல்லூரி அருகில், | உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| உரும்பிராய் | T.P. 021-222 3846 |
| T.P. 021-222 5279 | 070-212612 |

V. சச்சிதானந்தராஜா
Dr.Kanna,
"Kanna Clinic",
பிரதான வீதி, சித்தன்கேணி.
(22862) (26-12-14-21)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிந்தாமணி

நாவலடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிந்தாமணி அவர்கள் கடந்த 18.09.2003 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பாகாளிதேவி தம்பதிகளின் அன்பு மகளும் பொன்னம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதி - வெள்ளையம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் Dr.குணரட்ணம் (அவுஸ்திரேலியா), திருமதி சே.ஜானகி, திருமதி அ.பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீகணேசானந்தன (சுவிஸ்), ஸ்ரீஜெயகௌரி, காலஞ்சென்ற ஸ்ரீஜெயதேவி மற்றும் ஸ்ரீரட்ணராசா, ஸ்ரீஜெயசூரணி, ஸ்ரீஜெயலட்சுமி (மாணவி - யாழ்.பல்கலைக்கழகம், 2ஆம் வருடம், இந்து நாகரிகம், சிறப்புக்கலை), ஸ்ரீவேந்தன் (மாணவன்-யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராஜேஸ்வரி (சுவிஸ்), பன்னீர்ச்செல்வம் (லண்டன்), தங்கேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் பிருந்தன், பகீரதன், மௌலிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.09.2003 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (22877)(26-14-12-21) குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 14 04 1928 — ஆண்டவன் அணைப்பில் 24 08 2003



அமரர்

## திருமதி மயில்வாகனம் சோதி

அறுகம்புலமதனில் அறுநூறுவிட்டாய் வாழ்ந்திருந்தாய்
அரிய பிறப்பு தந்து ஆளாக்கி வைத்தாய் எம்மை
உரியதெல்லாம் கொடுத்து உதிரத்தை ஊனாக்கி
தூரிகை கரங்களால் துடைத்தெடுத்து வளர்த்தாய்
சொர்ந்திட்ட பாசத்தால் சொக்க வைத்தாய் எம்மை
அறியவைத்த கலைகளால் ஆளாகினோம் இன்று
மார்க்க நாளெடுத்து பரிசைப் பாவிடம் போய்சேர்ந்தாய்
கரிய நாளென்று கழித்துவிட்டோம்
தெரிய வந்த தேவதையைத் தொழுது நிற்போம் நாளும்
எரிய வீட்ட உப்புமடலில் எழுந்தருள் ஜோதி
சோதியை எரித்தவரே ஜோதி
சோகத்தின் சுமைகளுடன் தொடர்கிறோம் மீதி...

இன்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறுகம்புலம், தங்கோடை, காரைநகர். — மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(C/30282)

## உயர் பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியமர்வு பற்றி ஆராய்வதற்காக

# யாழ். வரும் வெளிநாட்டு, உள்நாட்டு பிரமுகர்கள் பாதிக்கப்பட்ட மக்களையும் நேரில் சந்திக்கவேண்டும்

யாழ்ப்பாணம்,செப்.23

உயர்பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு போன்ற விடயங்களை ஆராய்வதற்கென யாழ். வரும் வெளிநாட்டு, உள்நாட்டுப் பிரமுகர்கள் மாவட்ட செயலகத்தைத் தரிசித்து விட்டு திரும்பி விடுகின்றனர். அதனை விடுத்து பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாகிய சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளையும் சந்தித்து உண்மை நிலையை அறிந்துகொள்ள வேண்டும்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட சனசமூக நிலையப் பிரதிநிதிகளுக்கான கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் க. ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

★ அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கும் நிதியை உரிய கட்டமைப்புக்கள் ஊடாக ஒதுக்க வேண்டும். தங்கள் தங்கள் வாக்கு வங்கியினை நிரப்பும் நோக்கில் நிதி ஒதுக்குவதனை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

★ குடாநாட்டின் வீதியோரங்களின் அகலம் குறைந்து வருவதாலும், வீதியோர வியாபாரம் மற்றும் வீதியோரங்களில் விளம்பரப்பலகை நடப்படுதல் ஆகியவற்றாலும் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இதனை ஒழுங்குபடுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்த வேண்டும்.

★ யாழ். குடாநாட்டினுள் உள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தாம் நினைத்தபடி வேறு வேறான பயிற்சிகளை அளிக்கின்றன. அப்பயிற்சிகளை ஒருமுகப்படுத்தி சமுதாயத்துக்கு பிரயோசனமாக்குவதோடு, முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனத்தையும் சீராக்க சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும்.

★சமூகத்துக்காக தொண்டாற்றுகின்ற சனசமூக நிர்வாகிகள் பொது வேலைத் திட்டத்துக்காக அரச திணைக்களங்களை நாடும்போது அரச உத்தியோகத்தர்கள் அவர்களுக்கு மதிப்பளிக்க முன்வரவேண்டும்.

★ தமது பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமுதாய சீரழிவுகளை சரிசெய்து ஒழுங்குபடுத்த அப்பகுதி சனசமூக நிலையங்கள் முன்வந்து பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

★ இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்க முடியாது. புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி பல மாதங்கள் கடந்திருக்க வேண்டும். எனவே, நாம் எமது சொந்த இடங்களுக்குச் செல்ல உடன் வழிசமைக்க வேண்டும்.

★ மக்களை நேசித்து மக்கள் பிரச்சினையை விளங்கிக் கொண்டு மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியவர்களாகிய விடுதலைப் புலிகளின் கைகளில் வலுவான இடைக்கால நிர்வாகத்தை உடன் கையளிக்க அரசு முன்வரவேண்டும்.

★கிராமந்தோறும் சமூகத்தொண்டர்களை உருவாக்கும் பயிற்சிகளும், தலைமைத்துவ பயிற்சிகளும் வழங்குவதற்கு அனைத்து சனசமூக நிலையங்களும் ஒத்துழைக்க வேண்டும்.

★ கசிப்பு மற்றும் கலாசார சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★சனசமூக நிலைய மட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கோட்ட மட்டத்தில் வலுவானதொரு கட்டமைப்பு உருவாக்க வேண்டும்.

(ம-5-86)

## துப்பாக்கி ரவையுடன் விளையாடிய இளைஞர் அது வெடித்துக் காயம்!

யாழ்ப்பாணம்,செப்.23

வெடிக்காத நிலையில் கிடந்த துப்பாக்கி ரவையினை எடுத்து அதனை 'குறட்'டினால் கழற்ற முயன்ற இளைஞர் ஒருவர் அது வெடித்ததில் காயமடைந்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு கொடிகாமத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கச்சாய் வீதியைச் சேர்ந்த கே.சங்கர் (வயது-29) என்பவரே காயமடைந்தார். அவரது கைவிரல் மற்றும் நெஞ்சுப் பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

தென்னந்தோட்டம் ஒன்றில் அந்த இளைஞர் இருந்த சமயமே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.(ம-6-ரி)

## அரச, தனியார் பாடசாலைகளின் புவியியல் விவரம் திரட்டப்படுகிறது

### 'யுனிசெவ்' அமைப்பு நிதியுதவியுடன்

வலி.தெற்கு,செப்.23

கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சு, 'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் அரச, தனியார் பாடசாலைகள் பற்றிய புவியியல் தகவல்களைக் கட்டமைக்கும் பணியினை நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தவிர ஏனைய மாகாணங்களில இப்பணிகள் முடிவடையும் நிலையில உள்ளன. வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் இவற்றை விரைவாகச் செய்து முடிக்கும்படி நிதி உதவி வழங்கும் 'யுனிசெவ்' நிறுவனம் கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

மேற்படி பணியினை மேற்கொள்வது தொடர்பான ஆரம்பப் பணிகளை திட்டமிடவும் அறிமுகப்படுத்தவும் எதிர்வரும் 26ஆம் திகதி செயலமர்வொன்றை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது.

திருகோணமலை கோணேஸ்வரா இந்து வித்தியாலய கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்வுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சகல கோட்டக் கல்வி அலுவலர்களின் பணிப்பாளர்கள் ஆகியோரை வருகை தருமாறு அழைக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வில் கலந்துகொள்வோருக்கு செயலமர்வு நாளொன்றுக்கு 400ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். செயலமர்வுக்கு வந்துபோகும் மேலதிக நாள்களுக்கு பிரயாணப்படி, செலவுப்படி என்பனவும் வழங்கப்படும் என மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் எஸ்யூவிஜயரத்ன அறிவித்துள்ளார். (ம-152)

## நீதிமன்றச் சட்டஒழுங்குகளை மக்கள் மதித்து நடக்கவேண்டும்

### பொலீஸ் அதிகாரி வேண்டுகோள்

வலி.தெற்கு,செப்.23

நீதிமன்றச் சட்ட ஒழுங்குகளை மக்கள் மதித்து நடக்கவேண்டும் என்று மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பொலீஸ் பொறுப்பதிகாரி புஸ்பகுமார கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதிமன்ற வளாகத்துக்கு வருகை தரும்போது நீதிமன்ற சட்ட ஒழுங்குக்கு அமைய சட்டத்தைப் பேணி நடக்க மக்கள் பழகிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

நீதிமன்ற சட்ட ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்காமல் நடந்துகொள்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் அவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டி நேரிடும்.

அண்மைக் காலத்தில் நீதிமன்ற சட்ட ஒழுங்குகளை மக்கள் கடைப்பிடிப்பது குறைந்துகொண்டு வருகின்றது. நீதிமன்ற ஒழுங்கு விதிகளுக்கு மாறாக நவநாகரிக உடைகளை அணிந்து அவர்கள் நீதிமன்றம் வருவதைத் தவிர்க்க வேண்டும். உடைகளைச் சீராக அணிந்து, சட்டைத் தெறிகளை உரியமுறையில் பூட்டி வருகைதர வேண்டும். மது அருந்தி விட்டு நீதிமன்றம் வருவது பெரும் குற்றமாகும்.

இவற்றைச் சரியாகக் கடைப்பிடிப்பதன் மூலம் பொதுமக்கள் நமக்கேற்படும் சிரமங்களைத் தவிர்த்துத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ம-152)

## விபத்துக்களைத் தடுப்பதெப்படி? பஸ்களினுள்ளேயே விளக்கம்

### தமிழீழ காவல்துறை விசேட திட்டம்

வவுனியா,செப்.23

பயணிகளுடன் வீதியில் சென்றுகொண்டிருக்கும் பஸ்ஸினுள்ளேயே, விபத்துக்களை எவ்வாறு தடுப்பது என்று விளக்கம் அளிக்கும் செயற்றிட்டமொன்றை தமிழீழ காவல்துறையினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

வீதி ஒழுங்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள வேக எல்லையை மீறிச்சென்றுகொண்டிருக்கும் பஸ்ஸினுள் ஏறும் தமிழீழக் காவல்துறையினர், வாகன ஓட்டுநர், நடத்துநர், பயணிகள் ஆகியோருக்கு வீதி விபத்துக்களை எவ்வாறு தடுப்பது என்பது பற்றி விளக்கிக் கூறுவதுடன், விபத்துக்குக் காரணமான செயல்களையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அண்மைக்காலமாக வன்னிப் பகுதியில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமையால் இவ்வாறு புதியமுறையில் மக்களை விழிப்பூட்டுவதாக தமிழீழக் காவல்துறையினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பில் தமிழர் பாதுகாப்புக்கு தமிழ் பொலீஸார் நியமனமே தீர்வு

### இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,செப்.23

கொழும்பு நகரில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமிழ்ப் பொலீஸார் நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ்மக்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக அமைச்சர் சந்திரசேகரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்நுறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பொலீஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஆகியோருடன் இராதாகிருஷ்ணன் எம்.பி. தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

தொடர்ந்தும் அவர் முயற்சிகளை மேற்கொள்கின்றார். அதேசமயம், கொழும்பில் உள்ள வேறு சில அரசியல்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பொலீஸ் மா அதிபரைச் சந்தித்துப் பேசியுள்ளனர். இது வரவேற்கத்தக்கதாகும். தமிழ்மக்களின் பாதுகாப்புத் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரும் இன்று செயற்படுவது சாதகமான பலனைதரும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மாதர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,செப்.23

ஆனைக்கோட்டை மகாஜனா சனசமூக நிலையத்தினால் மாதர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி இந்த அங்குரார்ப்பணம் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி வசந்தியும் கலந்துகொண்டார். (எ-10-100)




வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 2003/2004 ஆண்டுக்கான நிர்வாக பதவியேற்பு வைபவம் அண்மையில் இடம்பெற்றது.
லயன் த.வே.சண்முகநாதன் மாவட்ட இணைப்பாளரான டாக்டர் வை. தியாகராஜாவிடம் இருந்து தலைவர் பதவியைப் பெறுகின்றார். அருகில் மாவட்ட தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருணானந்தம் உள்ளார்.

## பேராயர் ஜெபநேசன் யாழ். திரும்பினார்

யாழ்ப்பாணம்,செப்.23

தென்னிந்திய திருச்சபையின் அதிவணக்கத்திற்குரிய பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் கற்கைவிடு முறையை நிறைவுசெய்து கொண்டு யாழ். திரும்பியுள்ளார்.

ஆசிய திருச்சபைகளில் கிறிஸ்தவம் தொடர்பான விசேட விரிவுரை நிகழ்த்திய பேராயர் அவர்கள், அமெரிக்க பிறிஸ்டன் நகரில் ஒருவருட 'கிறிஸ்தவ திருச்சபை' (History of Christian Church) தொடர்பான ஆராய்ச்சியையும் மேற்கொண்டிருந்தார் யாழ் திரும்பிய பேராயர், திருசபைப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். (எ-185)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணுக்கு ரூ.60ஆயிரம் அபராதம்

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த பத்மராசா யோகேஸ்வரி என்பவருக்கே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 120போத்தல் கோடாவுடன் மேற்படி பெண்மணியை கைது செய்த மானிப்பாய் பொலீஸார் அவரை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரணை செய்த மல்லாகம் நீதிவான், அப்பெண்மணியை குற்றவாளியாகக் கண்டு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் தலா 15ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் அவரை விடுவிக்க உத்தரவிட்டார். (ம-152)

## கிழக்குப் பல்கலையின் திருமலை வளாக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிப்பு

திருகோணமலை,செப்.23

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் அனைவரும் கடந்த 15 ஆம் திகதியிலிருந்து சகல வகுப்புகளையும் பகிஷ்கரித்து வருகின்றனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் திருகோணமலை வளாகத்துக்கு புதிய மாணவர்களை அனுமதிக்க வேண்டும் என்றும் - அடுத்த ஆண்டு இந்த வளாகத்துக்கு பதிவாகியிருக்கும் மாணவர்களை வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் எனவும் - வேறும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் மாணவர்கள் இந்த விரிவுரைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதாக கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் விடுதி வசதியை ஏற்படுத்தித் தருமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்து, வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு இறுதியில் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த விடுதி மனித வாழ்க்கைக்கு உகந்தது எனக் கூறமுடியாத அளவுக்கு அங்கு வசதியீனங்கள் இருப்பதாகவும் மாணவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

### 'யுனிசெவ்' நிறுவனம்

## அம்பாறையில் மேற்கொள்ளும் திட்டங்களில் முறைகேடுகளா?

காரைதீவு,செப்.23

'யுனிசெவ்' நிறுவனம் அம்பாறை மாவட்டத்தில் செய்துவரும் பல உதவிகளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பாடசாலைகளில் குடிதண்ணீர் வசதி, மலசலகூடங்கள், தற்காலிக கொட்டில் வசதி போன்ற பல உதவித்திட்டங்கள் செயற்படுத்தும் போது வரம்பு மீறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

100 பிள்ளைகளுக்கு மேற்பட்ட ஆரம்ப பாடசாலைகளில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்த 'யுனிசெவ்' நிறுவனம் ஓர் உதவித்திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

சில வலயங்களில் 100 மாணவர்களுக்குக் குறைந்த பாடசாலைகளுக்கும் இந்த உதவி கிடைத்துள்ளது. ஆனால், மீள்குடியேற்றம் நடைபெற்ற மிகவும் பின்தங்கிய குடிதண்ணீர் தேவையான பாடசாலைகள் சிலவற்றிற்கு இந்த உதவி மறுக்கப்பட்டுள்ளதாம்.

தற்காலிக கொட்டில்கள் வழங்குவதிலும் அதிகாரிகள் ஒருதலைப்பட்சமாக நடந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதிபர்கள் விரைவில் 'யுனிசெவ்' பிரதிநிதியிடம் இதுதொடர்பாக முறைப்பாடு தெரிவிக்கவுள்ளனர்.

## ஒரு தொகுதி அ.அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ் மாவட்டத்திலிருந்து பாடசாலைகள் மூலம் தே.அ.அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான ஒரு தொகுதி அ.அட்டைகள் யாழ். செயலகத்தில் இயங்கும் ஆள்பதிவுத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

பாடசாலைகளின் அதிபர்கள் அலுவலக நேரத்தில் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (ம-5)

## மெய்வன்மை போட்டி

காரைநகர்,செப்.23

காரைநகர் வியாவில் சைவவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் அவர்களும் சிறப்பு விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (பொதுநிர்வாகம்) வ.இராதகிருஸ்ணனும் கௌரவ விருந்தினராக தொழிலதிபர் வை.நவசிவாயமும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-73)

## விளையாட்டு நிகழ்வுகள்

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் 'கா.சந்திரராசா' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டம் மற்றும கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**வலைப்பந்தாட்டம்**

★வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்.

★சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம்**

★சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர் வக்ரோறியா கல்லூரி. (ம-5)

# இனப்பிரச்சினை ஏற்பட மொழி வேறுபாடு முக்கிய காரணியாக இருந்து வந்துள்ளது

## அமைச்சர் இம்தியாஸ் கூறுகிறார்

பேருவளை,செப்.23

"இந்த நாட்டில் வாழும் பிரதான மக்களுக்கிடையில் கருத்துப் பரிமாறலுக்காக உரியமுறையில் தமது மொழியைப் பயன்படுத்த இயலாமல் இருப்பதும் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக எமது நாடு முகங்கொடுத்துள்ள இனப்பிரச்சினைக்கு முக்கிய காரணமாகும்.

"அதை உணர்ந்த தற்போதைய அரசு, இந்த இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சியெடுக்கின்றது.

"இந்தப் புரிந்துணர்வின்மையைப் போக்குவதற்காகத் தமது தாய் மொழியை அடுத்து இந்த நாட்டில் பாவனையில் உள்ள மற்றொரு பிரதான மொழியை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது".

-இவ்வாறு கூறினார் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்.

சமீபத்தில் அரச கரும மொழிகள் ஆணைக்குழு சபையினால் பேருவளைப் பிரதேச செயலாளர் பிரிவில ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இருமொழி தொடர்பான செயலமர்வில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அரச சேவையில் ஈடுபடுபவர்களுக்கு இருமொழிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்கான விளக்கங்களை வழங்கவென அரச கரும மொழி ஆணைக்குழுவால் நாட்டிலுள்ள 89 பிரதேச செயலாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் களுத்துறை மாவட்டத்தில் பேருவளைப் பிரதேச செயலாளர் பிரிவு மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த இருமொழிக் கருத்தரங்கினை பேருவளைப் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதுதான் இத்தகைய கருத்தரங்கு வேலைத்திட்டத்தின் முதலாவது பிரதேசக் கருத்தரங்காகவும் அமைந்தது.

பேருவளைப் பிரதேச செயலாளர் அதிகாரப் பிரிவினுள் உள்ள அனைத்து அரச ஊழியர்களின் பங்குபற்றலோடு நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் மேலும் உரையாற்றிய அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்:-

"சிங்கள மொழிக்கு மேலதிகமாக பெரும்பான்மையாக முஸ்லிம்கள் மற்றும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ்மொழியில் கடமையாற்றுவதில் உள்ள முக்கியத்துவத்தை அரச ஊழியர்களுக்கு அறிவுறுத்துவது இந்தச் செயலமர்வின குறிக்கோளாகும்.

பேருவளை போன்ற பல்லின மக்கள் வாழும் ஒரு அதிகாரப் பிரிவினுள் இவ்வகையிலான கருத்தரங்கொன்று நடைபெறுவது மிகவும் முக்கியமானதாக அமைகிறது.

சரியான மொழி அறிவு இன்மையினால் உண்டாகும் தொடர்பாடல் பிரச்சினை இன்று எமது நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை. இது தீர்வு காணப்படவேண்டிய ஒரு அடிப்படைப் பிரச்சினையாக இருக்கிறது.

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தினுள் படிப்படியாக உக்கிரமடைந்த இனப்பிரச்சினைக்கு இதனை அடிப்படைக் காரணியாகக் குறிப்பிடமுடியும். விசேடமாக வடக்கு - கிழக்குப் பிரதேச மக்களுக்கு தெற்கே அரசதுறையுடன் தொடர்புகொள்ளும் போது ஏற்படும் மொழி வாயிலான பிரச்சினையும், தெற்கே உள்ள மக்களுக்கு வடக்குடன் தொடர்புகொள்ளும்போது காணப்படும் மொழி சம்பந்தமான பிரச்சினையும் இனப்பிரச்சினை உக்கிரமாவதற்குக் காரணமாகியது.

இந்த இனப்பிரச்சினைக்கு மிகவும் உசிதமான தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கும் இத்தகைய சந்தர்ப்பத்தில் அதனை மேலும் பலமுறச்செய்வதற்கு எடுக்கும் வெற்றிகரமான முயற்சியாக இந்த இருமொழி அறிவு வேலைத்திட்டத்தை குறிப்பிட முடியும்.

அரச துறைகளில் இதனைச் செயற்படுத்துவதுடன் பாடசாலைக் கல்வியில் இதனைப் புகுத்துவதற்கும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதற்கமைய ஆரம்பக் கல்வியிலிருந்து சிங்களமொழியில் கல்வி கற்கும் சிறார்களுக்குத் தமிழ்மொழியையும் தமிழ்மொழியில் கல்வி கற்கும் சிறார்களுக்கு சிங்கள மொழியையும் கற்பதற்கு வேண்டிய வசதிகளை வழங்குவது அரசாங்கத்தின் குறிக்கோளாகும் - என்றார். (ம)

## புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகள் சந்திப்பு

நோர்வே நாட்டின் விசேட பிரதிநிதிகள் குழுவுக்கும், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

அன்றையதினம் பிற்பகல் 2.30மணியளவில் புனர்வாழ்வுக்கழக முதன்மைப் பணிமனைக்கு விஜயம் செய்த நோர்வேயின் துணை வெளியுறவு அமைச்சர் விடர் ஹெல்கிஸன் மற்றும் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர புனர்வாழ்வுக்கழகத்தின் மனிதாபிமான புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டனர். (எ-10)


**யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்**
(வரையறுக்கப்பட்டது)
**Jaffna District Private Lorry Owner's Co-Operative Society (Ltd)**
ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும - 2003
காலம் : 28.09.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி (பு.நேரம்)
இடம் : சங்கப் பணிமனை
தலைவர்: திரு.இ.அரிகரன் அவர்கள்
சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தரவும்.
*215, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.* (22896) (25-18-16-29)
க.சின்னத்தம்பி
கௌரவ செயலாளர்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 23 - 05 - 1938



உதிர்வு 24 - 08 - 2003

### அமரர் கனகசபை கந்தையாபிள்ளை

( நடுத்தெரு, காரைநகர் )

குடும்பத்தின் குலவிளக்கே
குன்றா மணிவிளக்கே
பாசத்தின் பார்விளக்கே
பண்புடைய திருவிளக்கே!
எம்மைவிட்டு நீர் பிரிந்தாலும்
எம்முள்ளே உமது அன்பு விளக்கு
திங்கள் ஒன்று சென்றாலும்
நினைவலையாக நிழலாடுதையா!!!

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டிகேணி ஐயனாரை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

(C-30311) (18-16-29)


**ஊழியர் தேவை**

கொழும்பு நிறுவனத்தின் யாழ். முகவர்களாகச் செயற்படும் நிறுவனத்துக்கு பெண் ஊழியர் தேவைப்படுகிறார்.
தகைமைகள் :
☆பட்டதாரி (B.Com) அல்லது க.பொ.த. உயர்தரம்
☆கணனி அறிவு விரும்பத்தக்கது
☆சுயவிவரக்கோவை (BIO DATA) யுடன் 27.09.2003 சனிக்கிழமை நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்பு:
அபிராமி எலக்றிக்கல்ஸ்,
இல. 62/34, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பிரதம தபாற்கந்தோருக்கு அருகில்)
(22901) (29-18-16)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு 01 - 06 - 1918



உதிர்வு 24 - 08 - 2003

### அமரர் சரவணமுத்து இராசரத்தினம்
(இரத்தினம்)

மனிதருள் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தீர்
புனிதருள் ஒருவராய் இறையுடன் கலந்தீர்
என்றும் உமது முகம் எமது மனத்தினுள்ளே
நின்று நிழலாடி நீங்காது நிலைத்திருக்கும்.

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அச்செழு, நீர்வேலி.* (22900) (29-18-16)
-அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### செல்லையா நல்லையா

கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும கொண்ட செல்லையா நல்லையா அவர்கள் நேற்று (22.09.2003) திங்கட்கிழமை நீர்கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மரியம்மாவின் அன்புக் கணவரும் யேசுதாஸன் டெனி, சீலன், பிறேமா, லீலா, டக்ளஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜடா, ஜெயா, மாலா, ஜெயரட்ணம், இரட்ணராஜா, றஜிதா அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்கம் நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.8, மாட்டின் லேன், யாழ்ப்பாணம்.* (22898)(29-18-16)
தகவல்: தே.ஜெயரட்ணம் (மருமகன்)


**இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி விசேட கழிவில் விற்பனைக்கு**

24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித் தரப்படும்.



உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது.

உத்தரவாதம் உண்டு.

HAND PHONE UNLOCK செய்து தரப்படும்.

எமது சேவை இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத் தருகின்றோம். அத்துடன், மேலதிக விவரங்களுக்கு:-

T.P:
0712 399220
0712 384624
0777 242416

HAND PHONE பழுதுபார்க்கப்படும்.

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ராஜா தியேட்டர் அருகில்)

(C/30313) (18-16-29)

**எமது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்**

| | | |
|---|---|---|
| விஜேய் வீடியோ சென்ரர், புங்குடுதீவு. 0712 399113 | இந்திரா கொமினிக்கேசன், நயினாதீவு அனலைதீவு. 0712 370471, 070 213207 0777 111448 | பிரசன்னா கணனி நிலையம், K.K.S றோட், சுன்னாகம். 0776090924 |
| திருப்பதி கொமினிக்கேசன், மானிப்பாய். 07021 3352, 0777 722914 021 222 5940 021 222 5732 | சன்கொமினிக்கேசன், திக்கரை, காரைநகர். 0712 299 264 070 21 3190 | தீபா கொமினிக்கேசன் பிள்ளையார் கோவில் வீதி, நெடியங்காடு, வல்வெட்டித்துறை. |
| பவர் கொமினிக்கேசன், நெடுந்தீவு. 0712 348922 0712 370491 | சொலக்ஸ் ஒப்றிக்கல், 100, கண்டி வீதி, சாவகச்சேரி. 0777 855328 | K.மதிஅழகன் வல்லை றோட், சங்கானை. 0712 - 358019 0777 243203 |
| V.அரவிந்தன் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். 0777 550949 | சுதன் கொமினிக்கேசன், மிருசுவில். 0777 584876 | சோதி கொமினிக்கேசன் வலுப்போடை, களபூமி, காரைநகர். 0712 370480 |
| | R.தயாகரன் வட்டுக்கோட்டை. 0777 244524 | |

# மாத்தளை கிரிக்கெட்டில் யாழ்.அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.23

மாத்தளையில் நேற்று ஆரம்பமான 16 வயதிற்குட்பட்டோருக்கான ஒரு நாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 133 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 42.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது.

ஒரு கட்டத்தில் யாழ். மாவட்ட அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 30 ஓட்டங்களை மட்டுமே பெற்று இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆனால், பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் தமது அணியின் நிலையை உணர்ந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

யாழ்.மாவட்ட அணி சார்பாக செந்தூரன் 73 ஓட்டங்களையும், லூட்சன், சியாம்ஸன் ஆகியோர் முறையே 38,24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி, யாழ். மாவட்ட அணி வீரர்களின் திறமையான பந்து வீச்சிற்கு முகம் கொடுக்கமுடியாமல் 68 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பந்து வீச்சில் யாழ்.மாவட்ட அணி சார்பாக அணித்தலைவர் பார்த்தீபன் 4 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், சியாம்ஸன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

(ம-5)


## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிருத்திய அழைப்பும்

பிறப்பு 31.12.1960



இறப்பு 14.08.2003

### அமரர் சண்முகம் சற்குணராசா

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சில் என்றென்றும் நீங்காது நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23-09-2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.* (22909)(16-18)

இலட்சுமி (தாய்),
சகோதரர்கள்.





Group and Personal Classes
(Paper and Theory)
**Combined Maths**
Mon.,Wed.-3.30 p.m.
Sat.-4.30 p.m.
**Chemistry**
Wed.,Sun.-5.00 p.m.
Mon.-4.30p.m.,Tue.-6.30a.m.
**Economics**
Mon.,Wed.-5.00 p.m.
**Accounts**
Thu.,Fri.-5.00 p.m.
START-24.09.2003
G.P.S. Road,
Kalviankadu, Jaffna.
(22886)(16-18)



## நல்லூர் பிரதேச சபை
### ஞானபண்டித வித்தியாசாலை வீதி சந்தைக்கடைகள்
### கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் கீழ்க்குறிப்பிட்ட கடைகள் 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் 29.09.2003ஆம் திகதி திங்கடகிழமை நண்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 30.09.2003ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிவரை நல்லூர் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

**கேள்வி விவரம்:**

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் தவிர்ந்த) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த கீ.மணி (வற் தவிர்ந்த) |
|---|---|---|---|
| கொக்குவில் சந்தை கடை 1 | 500/= | 10,000/= | 360,000.00 |
| கொக்குவில சந்தை கடை 2 | 500/= | 5,000/= | 144,000.00 |

கேள்வி நிபந்தனைகளையும் நடைமுறைகளையும் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
22.09.2003 (30314-16-18)

*செல்லையா செல்வரத்தினம்*
*செயலாளர்.*



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 26 ஓ 12 ஓ 1925 [யாழ்ப்பாணம்]



இறப்பு 15 ஓ 08 ஓ 2003 [கனடா]

### திருமதி கனகம்மா சரவணமுத்து

கடந்த 15.08.2003இல் கனடாவில் சிவபதமடைந்த எமது அன்னையின் அந்தியேட்டிக்கிரியைகள் 41ஆம் நாளான நாளை (24.09.2003) புதன்கிழமை காலை வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரணக் கிரியைகள் பகல் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயாரின் மறைவுச்செய்தியறிந்து துயருற்றிருந்தவேளையில் எமக்கு நேரடியாகவும் தொலைபேசி, தந்தி மூலமும் ஆறுதல் கூறியும் எம்மைத் தேற்றியும் பலவிதங்களில் உதவிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றிகள்.

தகவல்:
திரு.ச.சிறீஸ்கந்தராசா
778, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (22903)(16-18)

- பிள்ளைகள்.



## விளையாட்டு அவைக் கூட்டம் – 2003

மேற்படி கூட்டம் நாளை (24.09.2003) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு உடற்கல்வி அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பல முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடவிருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
யாழ். பல்கலைக்கழகம். (22904)(16-18) விளையாட்டு அவை.



## நிரஞ்சனாஸ்

அஜித், லைலா நடித்த
### தீனா
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (ப.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**ULTRA FORCE 2**
இரவு 9.45 (ப.நே.)
(C/29905)



## துயர் பகிர்கின்றோம்

எமது சங்கச் செயலாளர்
திரு. சி. இரகுநாதன் அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை** அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நகரசபை அலுவலகம்,**
**சாவகச்சேரி.** (C/30316)(16-18)

*சாவகச்சேரி நகரசபை*
*ஊழியர் நலன்புரிச் சங்கம்,*
*சாவகச்சேரி.*



## நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன், சிம்ரன், ஸ்நேகா, விவேக் நடித்த
### பார்த்தாலே பரவசம் (ரீல்ஸ்)
(சில தினங்கள் மட்டும்)
காட்சி நேரம் : 11.00, 2.00 (பி.நே.)
(C/29908)



## ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல்
சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டியராஜன், ஸ்ரீமான் நடித்த
### ராமச்சந்திரா
காட்சிகள்
10.30, 2.30, 4.30, 9.30 (பி.நே.)
(C/29904)



# SHARP
be sharp

## எமது வாடிக்கையாளர்களே!

புதிய ஒரு தொகுதி கையிருப்புக்கள் வந்துவிட்டன.

நீங்கள் இதுவரை உங்களது பழைய கறுப்பு/வெள்ளை அல்லது கலர் தொலைக்காட்சியை கையளித்து புதிய ஷார்ப் (SHARP) ரீ.வி ஒன்றைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் உடனடியாக பிறவுண்ஸ் காட்சியறைக்கு விரையுங்கள்.

உங்களது பழைய தொலைக்காட்சியை கையளித்து ரூபா 10,000/= வரைக்கும் விலைக் குறைப்புடன் புத்தம் புதிய ஜப்பானிய அதிநவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஷார்ப் (SHARP) ரீ.வி ஒன்றை 5 வருட உத்தரவாதத்தில் இன்றே வாங்குங்கள்.

**முழுமையான ஏமாற்றத்தைத் தவிருங்கள்.**
**கடைசிக் கையிருப்பு உள்ளவரை மட்டுமே.**

விபரங்களுக்கு: முகாமையாளர்,
பிறவுண் அன்ட் கம்பனி,
பிறவுண்ஸ் காட்சி அறை,
இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 021 222 5150, 0777 110791

(ச-40318)(16-18)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா பாக்கியம்

விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் பாலாவோடை, உடுவில் தெற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பாக்கியம் அவர்கள் நேற்று (22.09.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அரியோட்டி நடராசாவின் அன்பு மனைவியும் நாகம்மா, மீனாட்சிப்பிள்ளை, காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுசீலாவின் அன்புத் தாயாரும் பாலச்சந்திரனின் அன்பு மாமியாரும் சாஜிநாம், சாஜிறா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாலாவோடை,*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.* (22905) (29-16-18)

தகவல்:
குடும்பத்தினர்.

### சிவசம்பு ராஜ்மோகன் (மோகன்)

(யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவன்)

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு ராஜ்மோகன் 21.09.2003 ஞாயிறன்று லண்டனில் அகாலமரணமானார்.

அன்னார் சிவசம்பு (கனடா) - காலஞ்சென்ற சரஸ்வதியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வித்தியாரூபி, வினோதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நிதிலாவின் அன்பு மாமனும் லோகதாஸின் மைத்துனனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*பாரதி வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.*
*T.P. 0777110742* (22905) (29-16-18)

தகவல்:
கு.இராசபூரணம்
(பேர்த்தி)

# இந்திய மீனவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகபட்டினத்தைச் சேர்ந்த எஸ்.பாலு, அ.சந்திரன், க.சிவானந்தன், ம.சுந்தர் ஆகிய இந்திய மீனவர்களின் படகோட்டிகள் நால்வரும் கடந்த மார்ச் 4ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பினுள் - மாதகல் கரையில் இருந்து 3 கடல்மைல் தூரத்துக்குள் - அத்துமீறி மீன்பிடித்த மீனவர்களின் படகுகளை ஓட்டி வந்தார்கள் என்று இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி தனது வாதத்தில்:-

பிரஸ்தாப படகோட்டிகள் நால்வரும் எமது கடற்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து, எமது வளத்தை சூறையாடியுள்ளனர். இத்தகைய செயல்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. இதைத் தடுக்கும்வகையில் இவர்களுக்குக் கூடுதல் தண்டனை வழங்கவேண்டும் என்று தெரிவித்தார்.

மீனவர்களின் படகோட்டிகளின் நலனைப் பேணுவதற்காக நியமிக்கப்பட்ட சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு தமது வாதத்தில் -

பிரஸ்தாப படகோட்டிகள் இலங்கைக் கடல் எல்லைக்குள் தவறுதலாக வந்துவிட்டனர். அன்றையதினம் கடும் காற்று வீசியதால் இவர்கள் திசைமாறி இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்துவிட்டனர். ஏழ்மை நிலையில் உள்ள இவர்களை விடுவிக்கவேண்டும் - என்று கோரினார்.

"சம்பவதினம் கடும் காற்று வீசவில்லை. இவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறித்தான் ஊடுருவியுள்ளனர்." என்று கடற்படை அதிகாரி நீதிபதியிடம் தெரிவித்தார்.

இரு மணிநேர விசாரணையின் பின் நீதிபதி படகோட்டிகள் நால்வருக்கும் தலா ஆறுமாதச் சிறைத் தண்டனை விதித்தார். அவர்களின் நான்கு ட்ரோலர் படகுகளையும், இவர்கள் வசம் இருந்த மீன்பிடி உபகரணங்களையும் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில், பிரஸ்தாப நபர்கள் யாழ்.சிறைச்சாலையில் 6 மாதங்களுக்கு மேல் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள். எனவே, அக்காலத்தைத் தண்டனைக்குரிய காலமாக ஏற்று, இவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யும்படி மீனவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திருநாவுக்கரசு நீதிபதியிடம் கோரினார்.

இக்கோரிக்கையை ஏற்று, படகோட்டிகள் நால்வரையும் நாடுகடத்த உடன் ஏற்பாடு செய்யும்படி குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்கும் கடற்படை அதிகாரிகளுக்கும் நீதிபதி உத்தரவிட்டார்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவிய இந்திய மீனவர்களுக்கு எதிராக யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட முதலாவது வழக்கு இதுவாகும்.

## பிரபாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிய உறுப்பினர்களும் விமானப் படையின் விசேட ஹெலியில் வன்னி செல்கின்றனர்.

தாம் தயாரித்த இடைக்கால நிர்வாக வரைவு, புலிகளின் அமெரிக்கா விஜயம் ஆகியவை குறித்து புலிகளின் தலைமை இவர்களுடன் கலந்துரையாடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ-9)

## பங்களாதேஷ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருடன் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் நுருள் கமீன் சௌத்திரியும் வந்திருந்தார். நேற்றுக்காலை இருவரும் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனை சந்தித்து கலந்துரையாடினர்.

அதன்பின் முகமாலை இராணுவச் சோதனை நிலையத்துக்குச் சென்று அங்கு இடம்பெறும் சோதனை நடவடிக்கைகளையும் அவர்கள் பார்வையிட்டனர். நேற்றே இவர்கள் கொழும்பு திரும்பினர்.

## ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பகுதிக்குள் நுழைய முயன்றனர் எனக் கூறியே படையினர் அதனைத் தடுத்துவைத்தனர்.

ஓமந்தை சோதனைச்சாவடியில் படையினர் அந்த வாகனத்தை நேற்றுக் காலை 8.30 மணியளவில் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டனர் எனக் கூறப்பட்டது.

வாகனத்திலிருந்து 'புலிகளின் குரல்' வானொலி அதிகாரியும் மற்றொரு புலி உறுப்பினரும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வர எந்த ஓர் அனுமதியையும் பெற்றிருக்கவில்லை என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அவ்விருவரும் தொடர்ந்து பயணம் செய்ய படையினர் அனுமதிக்காததால் நோர்வே தூதரகம் ஊடாக அவர்கள் அரசிடம் தகவல் கொடுத்திருக்கின்றனர். அதையடுத்து இரு புலி உறுப்பினர்களையும் விடுவிக்குமாறு படையினருக்கு கூறப்படவே அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் எழிலன், இராணுவ அதிகாரி பிரிகேடியர் சுசில் சந்திரபால, பிரதிப் பொலீஸ்மா அதிபர் எஸ்.மிஸ்சிங், வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் 'பொங்குதமிழ்' நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'பொங்குதமிழ்' நிகழ்வின் நோக்கம் குறித்து ஏற்பாட்டாளர்கள் இக்கலந்துரையாடலில் விளக்கிக் கூறினர்.

இதனையடுத்தே, நிகழ்வில் பொலீஸார் பணியில் ஈடுபடுவர் என்றும் - படையினர் ஆயுதங்களுடன் மக்களுக்கு அச்சுறுத்தலாக செயற்படமாட்டார்கள் என்றும் - சம்பந்தப்பட்ட பாதுகாப்பு தரப்பு அதிகாரிகளால் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் தேசியக் கொடி ஏற்றுவது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் -

எனினும், திட்டமிடப்பட்டபடி நிகழ்வுகள் இடம்பெறும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஓ-3-164)

## இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து ஹெலிகொப்டரில் புறப்பட்டு கிளிநொச்சியை சென்றடைந்த அவர்கள் அங்கு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரை சுமார் இரண்டு மணிநேரம் சந்தித்துப் பேசினர்.

இடைக்கால நிர்வாக யோசனைகள் தொடர்பான தற்போதைய நிலையை உலக நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைத்த தமிழ்ச்செல்வன், தமிழ்மக்களின் கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் களைந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் யுத்த நிறுத்த உடன்பாட்டில் பல ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டு இணக்கம் காணப்பட்டதை விவரித்தார். அவை நிறைவேற்றப்படாததால் தமிழ் மக்களின் மனதில் ஏற்பட்டுள்ள அதிருப்தி மற்றும் விசனத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

அதற்குப் பதிலளித்த சர்வதேச நிதி நிறுவனப் பிரதிநிதிகள், டோக்கியோ உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் மற்றும் செப்ரெம்பர் 12ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஆகியவற்றின் பின்னணியில் வலுவுள்ள இடைக்கால நிர்வாகம் ஒன்று வடக்கு-கிழக்கில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப்போன்ற அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு அவசியமாகின்றது என்பதை தாங்கள் உணர்கிறார்கள் என்று தெரிவித்தனர்.

தமது ஒவ்வொரு நிறுவனமும் தமிழர் பிரதேசத்தில் மேற்கொள்ளும் திட்டங்களின் செயற்பாடு மற்றும் போக்குக் குறித்து தமிழ்ச்செல்வனோடு அந்நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

## தென்மராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிபுரம் அம்மன் கோவிலடி, எருவன் சந்தி, கொடிகாமம் துயிலுமில்லம், கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமச் சந்தி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கொடிகாமம் கச்சாய் வீதி தேவாலயம், கச்சாய் வாகையடிச் சந்தி, சீலன் பூங்கா, அல்லாரை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, மீசாலை நாற்சந்தி, லதீனா தொலைத் தொடர்பகம், புத்தூர் சந்தி, மீசாலைச்சந்தி, ஐயாகடைச் சந்தி, அரசடிச்சந்தி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி பிரதேச செயலகம், நுணாவில் அமிர்தாம்பிகை பாடசாலை, நுணாவில் சந்தி, வைரவர் கோவிலடி, கைதடிச் சந்தி, நாவற்குழிச் சந்தி ஆகிய இடங்கள் ஊடாகச் சென்று மாலை நல்லூரைச் சென்றடையும். மாலையில் நல்லூர் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களிடம் ஊர்தி கையளிக்கப்படும்.

இதேவேளை, காலை 9மணியளவில் சுன்னாகம் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்திப்பவனி சுன்னாகம் சந்தி, மல்லாகம் சந்தி, துர்க்கை அம்மன் கோயிலடி, மல்லாகம் சந்தி, ஏழாலை, குப்பிளான், வடக்கு புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் சந்தி, மயிலங்காடு, கோட்டைக்காடு, மல்லாகம் சந்தி, அளவெட்டி வடக்கு, மாசியப்பிட்டி ஆகிய இடங்கள் ஊடாக தொல்புரத்தைச் (?) சென்றடையும். இந்த ஊர்தி பவனி, நாளை சங்கானையில் இடம்பெறும். (ஓ-9)

# ஆலோசனைகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய இடைக்கால நிர்வாக வரைவை நாங்கள் நோர்வே ஊடாக அரசாங்கத்திற்கு கையளிப்பதற்கு முன்னால் எங்களுடைய சட்ட நிபுணர்களோடு மீண்டும் ஒரு தடவை ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டி இருக்கிறது. அதுபோல வெளிநாடுகளில் உள்ள நிபுணத்துவம் சார்ந்தவர்களோடும் சட்டங்கள் சார்ந்தவர்களோடும் நாங்கள் சில முக்கியமான விடயங்கள் குறித்து ஆலோசிக்க வேண்டியிருக்கின்றது. அதனால், அந்த அயர்லாந்து மாநாட்டை ஒழுங்குபடுத்தியிருக்கிறோம்.

இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமாக எமது தலைமைப்பீடத்தினதும் மக்களினதும் நிலைப்பாட்டை சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு நாம் தெளிவுபடுத்தினோம். குறிப்பாக வடக்கு - கிழக்கிலே சீரழிந்துபோயிருக்கின்ற நிர்வாகக் கட்டமைப்புக்களை சீரமைத்து சுரழைந்துபோயுள்ள (?) எங்களுடைய மக்களின் வாழ்வாதாரங்களை - வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகளை - கட்டியெழுப்புவதற்கான சூழ்நிலைகளை எதிர்காலத்தில் எப்படி அமைத்துக்கொள்வது என்பது பற்றிய எங்களுடைய தீர்மானங்களை அவர்களுக்கு நாம் தெளிவுபடுத்தினோம்.

குறிப்பாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தை நாம் வலியுறுத்தினோம். தமிழர் தாயகப்பிரதேசத்திலே முன்னெடுக்கப்படுகின்ற எந்த அபிவிருத்தித்திட்டமாக இருந்தாலும் அது நிச்சயமாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்பு அலகுக்கு ஊடாகவே சாத்தியப்படும் என்பதை நாம் அவர்களுக்கு உணர்த்தினோம்.

*கேள்வி:* தமிழர்கள் ஏற்றுக்கொண்ட நிர்வாக அலகினூடாகத்தான் நிதி கையாளப்படவேண்டுமென நீங்கள் கூறியிருக்கின்றீர்கள். இன்றைய சந்திப்பில் இதற்கு எவ்வகையான பதிலை சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் தந்தார்கள்?

*தமிழ்ச்செல்வன்:* அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஏனெனில், இது ஒரு யதார்த்த நிலைப்பாடு. எங்களுடைய கருத்தல்ல. இது இங்கேயுள்ள மக்களுடைய எதிர்பார்ப்பு. 50 வருடகாலமாகப் போராடி 25 வருடங்களாக எங்களுடைய தலைமையின் வழிநடத்தலில் மக்கள் மிகவும் நம்பிக்கை கொண்டு எங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்கும், ஆயுதப் போராட்டத்திற்கும் முழு அளவில் ஆதரவு தந்து, அதில் பங்கெடுத்துத் தங்களுக்கோர் உறுதிப்பாடான அரசியல் ஸ்திரத்தை (?) அவர்கள் வேண்டிநிற்கின்றார்கள்.

கடந்த காலங்களில் இருந்த அரசுகள் சர்வதேச சமூகத்திடம் வடக்கு - கிழக்கிற்கான அபிவிருத்தி என்று கூறி பெருமளவு நிதியைப் பெற்று அதை முற்றுமுழுதாகத் தமிழர் தாயக பிரதேசத்தை அழிப்பதற்குப் பயன்படுத்தின. ஆகவே, மக்கள் மனதில் அதுபெரிய அச்சமாக இருக்கின்றது. அதை நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தவேண்டிய தேவை இருக்கிறது. இனிவரும் காலங்களில் சர்வதேச சமூகம் தமிழர் தாயகத்திற்கும் தமிழ்மக்களுக்கும் செய்கின்ற உதவிகள், தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் அமைய வேண்டும். அதற்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடைக்கால ஏற்பாடாக ஓர் அதிகாரமுள்ள இடைக்கால கட்டமைப்பு ஒன்று நிறுவவேண்டியது அவசியம் என்பதை நாம் அவர்களுக்கு வலியுறுத்தியிருக்கின்றோம். அவர்களும் அதைப் புரிந்துகொண்டார்கள். இங்கேயுள்ள நிர்வாக கட்டமைப்புக்களின் குழப்பப் போக்கையும் பலவீனத்தையும் ஏற்கனவே அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அதை அவர்கள் வெளிப்படுத்தியுமிருக்கிறார்கள்.

*கேள்வி:* இந்தச் சமாதான காலத்திலும் நிதியைக் கையாண்டு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக எந்தவிதமான வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. அது குறித்தும் பேசினீர்களா?

*தமிழ்ச்செல்வன்:* தமிழர் தாயகப் பிரதேசத்தில் யுத்தம் நிறுத்தப்பட்டு, வெடிச்சத்தங்களும், உயிர் இழப்புக்களும் ஓய்ந்திருக்கின்றனவே தவிர, சீர்குலைக்கப்பட்ட எமது மக்களுடைய வாழ்வு நிலைகளில் எந்தவித சீர்மையும் ஏற்படுத்தப்படவில்லை. தமிழ் மக்கள் தொழிலில் ஈடுபட முடியாத நிலை, இராணுவ நெருக்குவாரங்களும், பல கட்டுப்பாடுகளும் இறுக்கமடைந்து கொண்டு போகின்றன. அதனால் எமது மக்களுடைய வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை.

இந்தச் சமாதான முன்னெடுப்பின் அடிப்படை அம்சமே ஓர் இயல்பு நிலைமைக் கொண்டுவருவதாகும். அது இங்கே ஏற்படுத்தப்படாதது மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தையும், விரக்தியையும், ஏமாற்றத்தையும்தான் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை அவர்களுக்கு நாம் தெளிவுபடுத்தினோம்.

தமிழர் தாயகப் பிரதேசத்திலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு - ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு - நன்மை கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொண்டுதான் சர்வதேச சமூகம் இங்கே உதவிகளைச் செய்வதற்கு முன்வரவேண்டும் என்ற எமது எதிர்பார்ப்பையும் அவர்களுக்கு நாம் தெளிவாக்கியிருக்கிறோம்-என்றார்.




STUDY & WORK IN UK
Queenspark College, London
Programmes offered from Diploma, through BBA & BSc to Post Graduate level including MBA, MSc and PhD, in the following areas:
Law, Business Studies
Information Technology,
Travel Tourism & Hospitality
Queens Park College offers:-
• High quality teaching • Courses accredited by UK universities and other internationally recognised accreditation bodies • Excellent location in Central London • Superb new facilities • Free internet access • Airport pick up and Accommodation provided where required • Job search assistance • Bank accounts opened • Student counselling
Complete Visa Assistance Provided
Overseas students are legally allowed to work for a maximum of 20hrs per week during term time
Authorised Counselling Centre:
Soft View Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Srilanka.
Tel/Fax:021-2225170 Mobile:077-6093477
Email: srilanka@studiesabroad.net
For more details visit: http://www.queensparkcollege.com

எமது புதிய
வீடியோ CD வெளியீடுகள்
ரஞ்சித் - தேவயானியின்
★ பிஷ்மர்
S.P.B. சரணின்
★ உன்னை சரணடைந்தேன்
வீடியோ விமல், யாழ்ப்பாணம்.

தேவை
பிரபல கணனி அச்சகம்
ஒன்றில் கீழ்வரும்
வெற்றிடங்களுக்கு
ஆள்கள் தேவை
1) முகாமையாளர்
(30வயதுக்கு மேற்பட்ட ஆண்)
2) ஒவ்செற் இயந்திரப் பயிலுநர் (ஆண்)
3) ஸ்கிரீன் பிறின்ரிங் பயிலுநர் (ஆண், பெண்)
4) ஒருங்கிணைப்பாளர் (ஆண்)
கடிதம் மூலம்
தொடர்பு கொள்ளவும்
விளம்பர இல. 2050
மே/பா உதயன்
(22-16-18)

★ கணக்கீடு ★
A/L 2004 DAY CLASS
கம்பனி
ஆரம்பம்: நாளை 7.00 a.m.
பங்குடமை
தினசரி 12.30 p.m.
ஆசிரியர்: S.தவா
B.Com(Hons.)(Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE
JAFFNA
(22889)

வடமராட்சி
மாணவர்களுக்கு
இக்கல்வியாண்டுக்கான
நெல்லியடி கிளை நிறுவனத்தின்
இறுதிப்பிரிவுகள்
27-09-2003 பகல் 10.00 மணிக்கு
ஆரம்பமாகவுள்ளன.
புலமைப் பரிசில் திட்டம் 2003 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.
இப்பிரிவில் அனைத்துக் கற்கைநெறிகளும் ஆரம்பமாகும்.
INSTITUTE OF INFORMATICS STUDIES
NELLIADY, KARAVEDDY.


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை நேற்று(22.09.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியாரும் சுப்பிரமணியம்(ஓய்வுபெற்ற இ.போ.ச.நடத்துநர்), தங்கராசா, அருணாசலம் கந்தையா(கிளை முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்), பரமசாமி(டென்மார்க்) ஆகியோரின் சகோதரியும் தங்கவடிவேற்பிள்ளை, புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சூரியகலா, தம்பிராசா ஆகியோரின் மாமியாரும் தமினி, தட்சினி, மாலதி, குகபாலன், தவபாலன், யுகேஸ் (யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி), கேவிதா (யாழ்.பல்கலைக்கழகம்), கோபனா (யாழ்.பல்கலைக்கழகம்), கோபிகா (சாவ/இந்துக் கல்லூரி), யுஜாஷ்ஷன் (சாவ/இந்துக்கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.09.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை,
சாவகச்சேரி.

தகவல்:
பொ.தம்பிராசா
(மருமகன்)

(22930) (22-16-18)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.